நகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 05 சனிக்கிழமை (20.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 001




## ஆயர்களின் கோரிக்கையை நிராகரித்தது அரசாங்கம்

(கொழும்பு)

நத்தார் மற்றும் புத்தாண்டை முன்னிட்டு போர் நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு ஆயர்கள் கூட்டாக விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் நிராகரித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டு அரசியல் பேச்சுக்களுக்குத் திரும்பினால்தான் போர் நிறுத்தத்தை பிரகடனப்படுத்துவது எனும் நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது என தேசிய பாதுகாப்பு ஊடக மையப் பணிப்பாளர் லக்ஸ்மன் குலுகல்ல கூறியுள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.,முல்லைத்தீவுப் பகுதிகளில் மோதல்கள் தொடர்கின்றன

### ஊடக மத்திய நிலையம் தகவல்

(கொழும்பு)

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் தொடர்ந்தும் நீடித்து வருகின்றன.

இதில் விடுதலைப் புலிகள் தரப்பு பெரும் இழப்புக்களைச் சந்தித்துள்ளதுடன் படைத் தரப்புக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் கூறியது.

அத்துடன் இரு தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற (16ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளிவாய்க்கால் மக்கள் குடியிருப்பு மீது நேற்று விமானங்கள் குண்டுத் தாக்குதல்

### 6 சிறுவர்கள் உட்பட 11 பேர் படுகாயம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் பகுதி மக்கள் குடியிருப்பு மீது வான்படை விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் ஆறு சிறுவர்கள் உட்பட 11 பொது மக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து நேற்றுக் காலை 9.45 மணியளவிலும் நண்பகல் 12 மணியளவிலுமாக இரண்டு தடவை விமான படையின் மிக் -27 ரக விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

கடல் தொழிலில் (16ஆம் பக்கம் பார்க்க)



அன்பு வாசகர்களே,
உங்கள் வலம்புரிக்கு
அகவை-9. பத்தாவது
ஆண்டில் காலடி எடுத்து
வைக்கும் இவ்வேளையில்
உங்கள் அனைவரினதும்
ஒத்துழைப்பைத் தொடர்ந்தும்
வேண்டி நிற்கின்றோம்.

-வலம்புரிக் குடும்பம்.

## நத்தார், புதுவருட தினங்களில் ஊரடங்கை தளர்த்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்மஸ் புத்தாண்டு தினத்தில் யாழ். குடாநாட்டில் ஊரடங்கு உத்தரவை தளர்த்துமாறு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ்.இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் நத்தார் மற்றும் புத்தாண்டு தினங்களில் யாழ்.குடாநாட்டில் வாழும் கிறிஸ்தவர்கள் (16ஆம் பக்கம் பார்க்க)


## பெற்றோலின் விலைக்குறைப்பை அடுத்த வாரம் வெளியிட அரசு முடிவு

(கொழும்பு)

பெற்றோல் விலையை லீற்றர் 120 ரூபாயில் இருந்து 100 ரூபாயாக குறைப்பதற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் நீதிமன்றத்தின் உத்தரவு கிடைக்கவில்லை என்று கூறி அமைச்சரவையானது பெற்றோல் விலை குறைப்பை நடை முறைப் படுத்தவில்லை.

மேலும் பெற்றோல் விலை குறைப்பு எதிர்பார்ப்பினால் (16ஆம் பக்கம் பார்க்க)

## இயக்குநர் சீமான் மீண்டும் கைது



(சென்னை)

தமிழ் மக்களுக்கு ஆதரவாகப் பேசி வருபவரும் திரைப்பட இயக்குநருமான சீமான் நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் தமிழக காவற்துறையினால் கைது செய்யப்பட்டுள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## படையினருக்காகக் காத்திருக்கும் கிளிநொச்சி மரண முற்றுகைக் களம்

### இந்திய றோவின் முன்னாள் செயலர் இராமன் தெரிவிப்பு

போரை எதிர்பார்த்து பல வாரங்களுக்கு முன்னரே புலிகள் கிளிநொச்சி அலுவலகங்களை விட்டு வெளியேறிவிட்டனர். கிளிநொச்சியில் இப்போது எதுவும் இல்லை.ஆனால் படையினருக்கு மரண முற்றுகைக் களமாக அது உள்ளது. எது மரண முற்றுகைக் களம் என்பது புலிகளுக்குத் தெரியும்.படைத் தரப்புக்குத் தெரியாது.இதுவே புலிகளுக்கு சாதகமானதாக உள்ளது என்று பி.இராமன் தெரிவித்துள்ளார்.விடுதலைப் புலிகளின் தோல்வி விடுதலை போராளிகளுக்குக் கிடைத்த தோல்வியாகவே பார்க்கப்படும். பயங்கரவாத அமைப்புக்குக் கிடைத்த தோல்வியாக அது பார்க்கப்படாது. மறுபக்கம் அரசாங்கப் படைகள் வெற்றிபெற்றால்,பெரும் இழப்புக்களைச் சந்தித்துப் பெற்ற சிறிய வெற்றியாகவே கருதப்படும் என அவர் அவுட்லுக் இணையதளத்துக்கு எழுதியுள்ளகட்டுரையில்குறிப்பிட்டுள்ளார்.

இந்த வார ஆரம்பத்தில் கிளிநொச்சியில் அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் (16ஆம் பக்கம் பார்க்க)




சூரியன் அலைகளில் (யாழ்ப்பாணம் 93 Mhz)
சனிக்கிழமைகளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளை கேளுங்கள்

உள் நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களை தாங்கி வருகின்றது
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சி. இது உங்களுக்காக
உங்கள் கதைகளை சொல்லும் ஒரு நிகழ்ச்சி

தொடர்புகளுக்கு மீண்டும் வாழ்வோம் த.பெ.எண் 1039 கொழும்பு

# தேசிய பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை முடிவுகள்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

*(வியாழக்கிழமை தொடர்ச்சி)*

எ.கிறிஸ்ரி -நல்லூர் தெற்கு (98), கே.மதன்- குடமியன் வரணி (98), எஸ். கிறிஸ்ணாம்பிகை-சுண்டுக்குளி (98), யு.யோக ராஜா-புலோலி வடமேற்கு (98), எஸ்.சர்மினி-அரியாலை (98), எஸ்.அனுசியா-கைதடி வடக்கு (98), ஜி.பி.பாலராஜா-பிரதான வீதி,யாழ்ப்பாணம் (98), எஸ். சிவஞானவதி-கொக்குவில் கிழக்கு(98), ஆர். திருச்செல்வி-வதிரி (98), கே.மதிரூபன்-கோண்டாவில் கிழக்கு (98), எ.இ.கமில்டா -ஈச்சமோட்டை (98), எஸ்.பத்மநாதன்-பிறவுண்வீதி (98), ஆர்.மேகலா-அரியாலை மேற்கு (98), எ.விஜிந்தினி-திருநெல்வேலி கிழக்கு (98), ரி.மதன்மோகன்-கொக்குவில் கிழக்கு (98).

என்.சிவசுந்தர்-மயிலணி (98), கே. நிகேதினி-கே.கே.எஸ்.வீதி,யாழ்ப்பாணம் (98), எஸ்.ஸ்ரீகிருஸ்ணா-சுன்னாகம் தெற்கு (98), என்.நரேந்திரா-பிறவுண்வீதி (98), ஆர். மதன் -திருநெல்வேலி கிழக்கு (98), எம்.மருதவாணி-மன்னார் (98), சி.அன்ரன்யூட்பீரிஸ்-சிலாபத்துறை (98), எ.எஸ்.டயஸ்-மன்னார் (98), வி.தயாநிதி-வவுனியா தெற்கு (98), என்.திலகராசன்-உக்குளாங்குளம் (98), எஸ்.சிவாஞ்சநேயன்-வவுனியா(98), கே. சர்மினி-உக்குளாங்குளம் (98), ஆர்.காண்டீபன்-வேப்பங்குளம்(98), ரி.பகீதரன்-கோவில் புதுக்குளம்(98), வி.சசிகரன்-ஸ்கந்தபுரம் (98), எஸ்.தர்மலிங்கம்-வல்வெட்டித்துறை(98), சி.சி.டேவிட்-வவுனியா (98), எம்.எஸ்.ரங்கநாயகம்-யாழ்ப்பாணம் (98), எஸ்.யசோதா-இணுவில் தெற்கு (98), எம்.மணிமேகலா-புலோலி தெற்கு (98).

எஸ்.கல்யாணி -அல்வாய் கிழக்கு (98), எஸ்.சிவாஜினி-கோண்டாவில் கிழக்கு (98), ரி.சுமந்திரா-நல்லூர் (98),எஸ்.சத்தியராணி-நாவற்குழி (98), ஜே.தமிழழகன்-கோண்டாவில் (98), ரி.ஹென்றறீகன்-சுண்டுக்குளி (98),எஸ்.சிவயாழினி-உடுவில் கிழக்கு (98), கே.சசிக்குமார்-நவாலி தெற்கு (98), எஸ்.செந்தூரன்-கொக்குவில் கிழக்கு (98),ஜி.நிஷாந்தி-அச்சுவேலி தெற்கு (98).

ரி.விநாயகதாசன்-பட்டாணிச்சூர் வவுனியா (98), கே.வீரசிவகரன்-தெல்லிப்பழை (98), ரி.அமிர்தலிங்கம்-கைதடி மேற்கு (98).

கே.சிவச்செல்வன்-வதிரி(96), வி.சுதாகரன்-அராலி வடக்கு (96), ரி.ஜீவானந்தன்-மானிப்பாய் (96), ஜே.நீலாம்பிகை-ஏழாலை தெற்கு (96),ரி.சௌந்தராணி-நீராவியடி (96),எஸ்.புவனகுமாரி-உடுப்பிட்டி(96)ஜே.ஆரியதாஸ்-ஆனைக்கோட்டை (96),என்.விதூசன்-இளவாலை(96), ஆர்.வனிதா-புலோலி தென்மேற்கு (96),எஸ்.ஸ்ரீகந்த சேகரம்-நெல்லியடி (96),எம். மதிதாஸ்-புலோலிதென்மேற்கு(96), ஜி.கிருஷ்ணானந்தி-இமையாணன் கிழக்கு(96), ஆர்.அஜந்தா-கொக்குவில் கிழக்கு(96),பி.துஷிகர்ணா-தாவடி (96),என்.சமிவேல்-பருத்தித்துறை (96), என்.ஜெயராஜா-புலோலி வடக்கு96), எஸ்.சபராகரன்-இணுவில் கிழக்கு, சுன்னா கம் (96), என்.சிவானி-கந்தர்மடம்(96),எஸ்.அஜ நந்தன்-இமையாணன் மேற்கு (96).

வி.கமலினி-அளவெட்டி (96), பி.கிருஷ்ணமாலா-சுழிபுரம் கிழக்கு(96 ), கே.ஜெயந்தினி-கோண்டாவில் கிழக்கு(96),ரி.சுகந்தன்-தாவடி வடக்கு(96),ரி.மீரா-துன் னாலை மேற்கு (96), ரி. பிறிஜெற்றெனுஜா-சங்குவேலி வடக்கு(96), ஆர்.திலீபன்-வேலணை மேற்கு (96), எஸ்.கருணாகரன்-மீசாலை மேற்கு(96),ஈ.சிவாஜினி-பண்ணாகம் தெற்கு (96), என்.யோகநிதி-நீராவியடி(96), என்.ஜே.பீரிஸ்-பேசாலை(96), ஜே.சிவயோகராஜா-உப்புக் குளம்(96), சி.பி.லோர்டெஸ் மரியயாழினி-முருங்கன் (96),எஸ்.நிஷாந்தா-வைரவப் புளியங்குளம் (96).

பி.அம்பகைதரன்-மகாரம்பைக்குளம் (96),கே.சயிந்தினி-கோவில் புதுக்குளம் (96),ஜே.ஏ.சண்முகநாதன்-உருத்திரபுரம் (96), ஆர்.சின்னையா-வவுனியா(96),எல். எஸ்.ரதி-இளவாலை (96),கே.துர்க்கா-நெளுக்குளம் (96), கே.ஆனந்தகோபன்-இணுவில் தெற்கு(96), ரி.தயானந்-தொண்டைமானாறு (96), ரி.மோகனதாஸ்-ஆவரங் கால் மேற்கு (96), கே.ராகவன்-இடைக் குறிச்சி (96), என்.கிசோக்குமார்-உரும்பிராய் மேற்கு (96).

எஸ்.கிசோக்குமார்-உரும்பிராய் மேற்கு (96),எம்.எம்.வலன்ரீனா-குருமன்காடு (96), எம்.எஸ்.சுதர்சன்-மட்டுவில் தெற்கு (96), ஆர்.ஜெனால்ட்அன்ரனி-ஊர்கா. வற்றுறை (96), பி.சுகந்தினி-அளவெட்டி கிழக்கு (96), ஜீ.இராஸேஸ்வரி-நல்லூர் (96), ஆர்.இராஜமோகன் -வேப்பம்குளம்(96), வி.சிவகுமாரி-தோணிக்கல் (96),கே.அரவிந்தன்-பூவரசம் குளம் (96),ஆர்.இராஜ்குமார்-உரும்பிராய் வடக்கு(96).

எஸ்.சிவபாலசுந்தரம்-கொக்குவில் கிழக்கு (94),கே.நடராஜா-விடத்தற்பழை (94), வி.பார திதாஸ்-புலோலி கிழக்கு (94) ,ரி.சுதாநிதி-கோப்பாய் மத்தி (94),என்.பிரதீபன்-நல்லூர் (94), ரி.எட்வேட்-அல்வாய் வடக்கு (94), ஆர்.ஜெயகாந்தன்-கரம்பன் கிழக்கு (94), எஸ்.சுரேசியா-சங்கானை (94), பி.வரலக் ஷ்மி-அத்தியடி புதுவீதி (94), எஸ். செல்வகுமார்-இடைக்காடு(94), கே.செந்தமிழ் அரசி -அச்சுவேலி தெற்கு(94).

என்.நவஜீவன்-மானிப்பாய் (94), பி.சுபாஜினி-அச்சுவேலி வடக்கு(94),எஸ்.ஸ்ரீஞானேஸ்வரன்-கோவில் வீதி யாழ்ப்பாணம் (94),வி.மாதினி-கல்வியங்காடு(94), எஸ். நேர்லின் சர்மினி சுண்டுக்குளி (94), ஜே.சோமசுந்தரம்-தாவடி வடக்கு (94),ஏ.எஜ்.சி.சர்மிலா-உடுவில் (94),எஸ்.ஈ.லோகு-முருங்கன் (94), எஸ்.அலோஜினி-வவுனியா (94), எஸ்.ராதிகா-தர்மபுரம்(94), எஸ்.தேவமதி -கண்டாவளை (94), எ.தர்சினி-சுழிபுரம்(94), எஸ். அஜந்தா-கொழும்புத்துறை(94), ரி.பிரதீபன்-அரியாலை (94), கே.செந்துரன்-சாவகச்சேரி (94), கே.சசிகரன்-தெல்லிப்பளை கிழக்கு(94), ஆர்.மைதிலி-மயிலணி வடக்கு (94), ஆர்.மஞ்சுளா-மல்லாகம்(94).

எம்.ஜெயதர்சினி-பண்ணாகம் (94), எஸ்.அன்ரனிற்றா-கைதடி(94), ஆர்.தாரணி-வண்ணார்பண்ணை (94), கே. சுபாசினி-கரவெட்டி மேற்கு (94), எஸ்.கலைவாணி-வவுனியா (94), வி.மேனகா-கணேஷபுரம் (94), வி.ரஜனி-வேப்பங்குளம்(94).

ஐ.துஷ்யந்தினி-துன்னாலை(92), பி.உதயகுமார்-இராஜேந்திராவீதி, யாழ்ப்பாணம்(92), ரி.டி.ஸி.பிராங்ளின்-ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்(92), எஸ்.கவிதா-அச்சுவேலி(92), ரி.மகிந்தன்-அல்வாய் தெற்கு(92), எஸ்.ஸ்சினேதாஜி-சாவகச்சேரி (92),கே.சசிகலா-காரைநகர் (92), வி.இராசரெட்ணம்-வல்வெட்டித்துறை (92), ஜி.ஞானப்பிரகாசம்-வல்வெட்டித்துறை(92), எஸ். சுபாஜினி-வடலியடைப்பு (92), வை. கிருபாகரன்-திருநெல்வேலி மேற்கு(92),ஜெ.உதயன் -காரைநகர்(92),ரி.சோபனா -சாவகச்சேரி (92), வை.பிரதீபா-அராலி வடக்கு(92).

எம்.அமிர்தினி-தெல்லிப்பளை (92), எம்.பிரபாகரன்-கொக்குவில் கிழக்கு(92), என்.செல்வக்குமரன்-பருத்தித்துறை (92), வி.பத்மநாதன்-ஏழாலை வடக்கு (92), எஸ். ரதீஸ்வரன்-சுதுமலை தெற்கு(92), பி.பத்மசீலன்-கந்தர்மடம் (92) ,ரி.கீதாம்பரன்-இளவாலை(92),ஆர்.எல்.குணரட்ணம்-நவாலி தெற்கு(92), ரி.ஜேந்திரன்-கோண் டாவில் கிழக்கு(92), ஆர்.என்.சி. ஆனந்த யோதி-பேசாலை(92),டி.ரி.மரியாம்பிள்ளை-மன்னார்(92), ஜே.எம்.ஜே.மார்க்-மன்னார் (92), ஏ.ஆர்.இ.டாலிமா-மன்னார்(92), என்.சிவப் பிரதீபன்-உப்புக்குளம் (92), எ.விஜயந்தி-புதுக்குடியிருப்பு (92), எஸ்.கார்த்திகா-முள்ளியவளை (92),எஸ்.இலங்கேஸ்வரன்-வவுனியா(92).

யு.யசோதரன்-வைரவப்புளியங்குளம் (92), கே. நிரோசினி-வவுனியா(92), பி.தர்மமேந்திரா-பண்டாரிக்குளம் (92),எஸ்.சுகந்தன்-வவுனியா(92), எஸ்.லோகேஸ் வரன்-உதயநகர்(92), எல்.ரேணுகாதேவி-நெலுக்குளம்(92), கே.சுஜிதா-மானிப்பாய் (92), எஸ்.வாசுகி-சாவகச்சேரி (92), ரி.கேமாலினி -கலட்டி,யாழ்ப்பாணம்(92), ஏ.அமிர்தபாசினி-சுண்டுக்குளி(92),வி.அருட் செல்வம்-புலோலி தென்மேற்கு(92), எஸ். திருவானந்தன்-அளவெட்டி கிழக்கு(92).

பி.பாஸ்கரன்-ஆனைக்கோட்டை (92), எஸ்.சிவச்செல்வன்-தும்பளை(92), வி.மாலினி-துன்னாலை கிழக்கு (92), எஸ்.ஸ்ரெலின் கருணாதாஸ்-நவாலி தெற்கு(92), கே.சஞ்சீவன்-சாவகச்சேரி (92).

எஸ்.செந்தூரன்-அல்வாய் வடமேற்கு (92), என்.சுதர்மினி-பலாலிவீதி, யாழ்ப்பாணம்(92), ஆர்.காந்தலிங்கம்-கோண்டாவில் மேற்கு(92), கே.ருக்ஸி-தாவடி தெற்கு (92), வி.எல்.எஸ்.சுபோதினி-நாவாந்துறை (92), எஸ்.மதிரூபன்-கரணவாய்(92), பி.அஜந்தகுமார்-சுன்னாகம்(92), எஸ். சிவசங்கர்-இணுவில் தெற்கு (92),ஏ.பைரூஸ்-மன்னார் (92), எஸ்.சிவாஜினி-வவுனியா(92).

(தொடரும்)

## அதிபர் புஷ் மீது வீசிய சப்பாத்துக்கள் அழிப்பு

(பாக்தாத்)

அதிபர் புஷ் மீது செய்தியாளர் வீசிய சப்பாத்துக்களை பாதுகாப்புப் படையினர் அழித்து விட் டனர். சப்பாத்துக்களில் வெடிமருந்துகள் உள்ளனவா என, பரிசோதனை நடத்தியபோது இவ்வாறு செய்து விட்டதாக, வழக்கை விசாரிக்கும் நீதிபதி கூறினார். இது தொடர்பாக அந்த நீதிபதி மேலும் கூறியதாவது, அமெரிக்க அதிபர் புஷ் மீது வீசிய சப்பாத்துக்களை, ஈராக் மற்றும் அமெரிக்க பாதுகாப்புப் படையினர் தீவிரமாக சோதனை நடத்தினர். பின்னர் அவற்றை அழித்து விட்டனர். இந்த வழக்கில் முக்கியமான ஆதாரங்கள் இல்லை என்றாலும் விசாரணை நடவடிக்கைகள் பாதிக்காது. சப்பாத்துக் களை வீசிய அல்-ஜெய்தி, தன் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் அவரின் செயலை தொலைக்காட்சிகளும் படம் பிடித்துள்ளன. அதனால் விசாரணையை தொடர்வதில் பிரச்சினை இருக்காது. இவ்வாறு நீதிபதி கூறினார். இதற்கிடையில் பெத்தலகேம் நகரில், பாலஸ்தீன பத்திரிகையாளர்கள் 50 பேர் அல்-ஜெய்திக்கு ஆதரவாக போராட்டம் நடத்தியுள்ளனர். (ச-5)

## இலங்கை எம்.பிக்கள் சுவீடனுக்கு விஜயம்

(கொழும்பு)

சுவீடனில் வாழும் இலங்கையரிடம் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நியாயப்படுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு சென்றுள்ளது.

அமைச்சர்கள் டிலான் பெரேரா, ரோகித அபேய குணவர்த்தன, துமிந்த திஸநாயக்க மற்றும் லலித் திஸநாயக்க ஆகியோர் அடங்கிய குழு கடந்த புதன்கிழமை சுவீடன் சென்றடைந்தது.

சுவீடன் அமைச்சர்கள், புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர் மற்றும் சுவீடன் இளையோர் சமூகத்திடம் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் செயற்பாடுகளை இக்குழு மேற்கொண்டுள்ளது.

சுவீடன் பிரதி சபாநாயகர் பிரிக்கித செலென் உள்ளிட்ட சுவீடன் நாடாளுமன்ற குழு உறுப்பினர்களையும் நாடளுமன்ற உறுப்பினர்கள் குழு சந்தித்துப்பேசியது. (ச-5)

## இராணுவ நடவடிக்கை தீர்வல்ல; பிரி.அமைச்சர் சபையில் உரை

இராணுவ நடவடிக்கைகளால் இனப்பிரனக்குத் தீர்வு காணமுடியாது என்று பிரித்தானிய வெளிவிவகார இணை அமைச்சர் பில் ராம்மெல் தெரிவித்துள்ளார். இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாக பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நடை பெற்ற விவாதத்தின் மீது பில் ராம்மெல் பேசியதாவது, புனித வெள்ளி நாளையொட்டி ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வட அயர்லாந்தில் உருவாக்கப்பட்டுள்ள அரசியல் நடைமுறைகளை பார்வையிடுமாறு இலங்கையின் அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு இந்த ஆண்டின் தொடக்கத்தில் அழைப்பு விடுத்திருந்தோம்.

அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு அண்மையில் முன்வைத்துள்ள அதிகாரப் பகிர்வுப் பரிந்துரைகள் முன்னேற்றகரமான ஒரு நடவடிக்கையாகும்.

இருப்பினும் அனைத்து பிரதான அரசியல் கட்சிகளையும் அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவின் நடைமுறைகளில் இணைக்க வேண்டியதில் இலங்கை அரசாங்கமானது மேலதிகமாக கவனம் செலுத்த வேண்டும். விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கம் என்பதை மறந்து விடக்கூடாது.

பயங்கரவாத வழிகளைக் கைவிடுமாறு நாம் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்கிறோம். ஜனநாயக நடைமுறைகளின் மீதான ஈடுபாட்டை வெளிப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

அதே நேரத்தில் இலங்கை இராணுவ நடவடிக்கையானது இனப்பிரச்சினைக்கு தீர்வை ஏற்படுத்தாது என்றார் அவர். (ச-5)

## மட்டு.வில் படையினர் மீது கிளைமோர்த் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மொறக்கொட்டாஞ்சேனையில் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் படைத்தரப்பைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்துள்ளனர். இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது,

மொறக்கொட்டாஞ்சேனை பிரதான வீதியில் உள்ள படையினரின் முகாமுக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் விடுதலைப்புலிகள் கிளைமோர்த் தாக்குதலை நடத்தினர்.

இதில் படைத்தரப்பைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்துள்ளனர் என விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர். (ச-5)

# மகேஸ்வரன் எம்.பி.யின் நினைவு பேருரையும் நூல்கள் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் முதலாமாண்டு நினைவஞ்சலியும் நினைவுப்பேருரையும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ் நாட்டு பேராசிரியர் முனைவர் இரா.செல்வக்கணபதி "திருவெம்பாவையில் சைவசித்தாந்த நுண்பொருள்" எனும் பொருளில் நினைவுப் பேருரையாற்றுவார்.

அத்துடன் பத்திரிகையின் பார்வையில் மகேஸ்வரன், "பாராளுமன்றம் சூட்டிய புகழாரம்", "பாராளுமன்றத்தில் மகேஸ்வரன்" எனும் மூன்று நூல்கள் மற்றும் இறுவெட்டு என்பனவும் வெளியிடப்படவுள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணம்,காரைநகர் ஈழத்து சிதம்பரம் அறப்பணி நிலைய மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நினைவுப்பேருரையும் நூல்கள் வெளியீடும் நடைபெறும். (ஓ)

## புனரமைக்கப்பட்ட கால்வாய் கையளிக்கும் வைபவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்ட நான்கு கற்களிக்குளக் கால்வாய்களை வைபவரீதியாக சம்மேளனத்திடம் கையளிக்கும் வைபவம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வட்டு. தெற்கு காரைநகர் வீதியில் உள்ள கால்வாய்க்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தொல்புரம் கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி. சாவித்திரி சிவநாதன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். விவசாயத் திணைக்கள பொறியியல் உதவியாளர் ரி.சிவானந்தன், யாழ். விவசாயத் திணைக்களப் பொறியியல் உதவியாளர் வி. சிவாஜி, வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவன தலைவர் அ.அரியரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4)

## சொந்த வீடுகளுக்கு திரும்ப முடியாதோர் உறவினர் வீடுகளில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாத இறுதியில் பெய்த புயலுடன் கூடிய கடும்மழை காரணமாக இடம்பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த மக்கள் அனைவரும் முகாம்களை விட்டு வெளியேறி விட்டதாக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்பும் 65 குடும்பங்கள் இந்நலன்புரி முகாம்களில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர்களில் 48 குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாத நிலையில் அவர்களது உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)




யாழ்.செய்திகள்

## விவசாயிகளுடனான கலந்துரையாடல்

(அரியாலை)

அரியாலை விவசாய சம்மேளனம் நடத்தும் விவசாயிகளுடனான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை இராணுவத்தின் 512 ஆம் படையணிப் பிரிவின் அரியாலை சிவில் அலுவலகப் புதிய இணைப்பதிகாரி அரியாலைப் பிரதேசத்தில் இவ் வருடம் நெற்செய்கையில் ஈடுட்டுள்ள அனைவரையும் சந்தித்துக் கருத்துப் பரிமாற உள்ளனர்.

இக் கலந்துரையாடலில் விவசாயிகள், தொழிலாளிகள் எதிர்நோக்குகின்ற சகல விடயங்களும் ஆராயப்பட்டு ஏற்புடைய முடிவு எடுக்கப்படவுள்ளதால் இப் பகுதியில் நெற்செய்கையில் ஈடுபடும் காணிச் சொந்தக்காரர்கள், குத்தகைக்குச் செய்கையில் ஈடுபடுவோர் மற்றும் தொழிலாளிகள் அனைவரையும் இக் கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றுமாறு அரியாலை விவசாய சம்மேளனம் கேட்டுக் கொள்கிறது. (ஓ-4)

## நூலக சேவை மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகின்றது

### உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

உள்ளூராட்சி சேவைகளில் நூலக சேவை என்பது மக்களுக்கான சிறந்த சேவைகளில் ஒன்றாகும் மனித வளர்ச்சிக்கும் சமூதாயத்தின் அறிவு சார் வளர்ச்சிக்கும் இச் சேவையின் மூலம் பெரும் பங்காற்றலாம். சிறந்த பிரஜைகளை உருவாக்குவதில் நூலகங்களின் பங்கு தலையாயது.

இச் சேவையைச் செய்யும் நீங்கள் மக்கள் மத்தியில் சிறந்த கருத்துக்களைக் கொண்டு செல்லவேண்டும். சேவையில் பற்றுள்ளவர்களாக இருந்தால் நிச்சயமாக உங்களால் நல்லதொரு சமூதாயத்தை கட்டியெழுப்ப முடியும் என்று யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் அவர்கள் தெரிவித்தார்.

அண்மையில் உள்ளூராட்சி சபைகளால் நிர்வகிக்கப்படும் நூலகங்களில் கடமையாற்றும் நூலகர்கள் மற்றும் நூலக சேவகர்கள் ஆகியோருக்கு நூலக சேவையை அபிவிருத்தி சம்பந்தமான உள்ளூராட்சி மறுசீரமைப்பு செயலமர்வு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகர் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் செயலமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

உள்ள வளங்களைப் பயன்படுத்தி சிறந்த சேவையை ஆற்றவேண்டும் சூழலில் உள்ள பிரச்சினைகள் எமது ஆளு ஷமயை பாதிக்கக்கூடும். ஆனால் அதனை எமக்கு சாதகமாக பயன்படுத்தி எமது ஆளுமையை வளர்த்துக்கொள்வதுடன் எமது பிரதேசத்திற்கு ஏற்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேவையில் முன்னேற்றம் காண வேண்டும் என்றார். (ஓ-29)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத் திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவினால் களஞ்சிய முகாமைத்துவம், அறிக்கை தயாரித்தல் தொடர்பான ஒரு நாள் பயிற்சிப் பட்டறை ஒன்று ப.நோ.கூ சங்க பொது முகாமையாளர், களஞ்சியக் காப்பாளர், கோட்டக்கல்வி அலுவலகங்களில் கல்விக்கான உணவு தொடர்பான கடமையாற்றும் அபிவிருத்தி உதவியாளர்கள் ,பிரதேச செயலகங்களின் உலக உணவுத் திட்டம் தொடர்பான கடமைகளை மேற்கொள்ளும் ஒரு அபிவிருத்தி உதவியாளர் /பொது முகாமைத்துவ உதவியாளர் ,உலக உணவுத் திட்ட கோப்பாய்க் களஞ்சிய, களஞ்சியக் காப்பாளர், உதவிக் களஞ்சியக் காப்பாளர், செவ்வை பார்க்கும் எழுத்துவினைஞர்கள் ஆகியோருக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி அன்று காலை 9 மணியிலிருந்து மாலை 4மணி வரை நடைபெறவுள்ளது. (ஓ)

## அமரர் ஏ.ஜே.யின் நினைவஞ்சலி நிகழ்வு

அமரர் ஏ.ஜே கனகரத்தினாவின் நினைவஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஏ.ஜேயின் நண்பர்கள் ஏற்பாட்டில் நடைபெறும் இந் நிகழ்வில் அஞ்சலி உரையினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கம் நிகழ்த்தவுள்ளார். அத்துடன் ஏ.ஜே. பற்றி கலாநிதி சுரேஸ் கனகராஜா தொகுத்த "AJ The Rooted Cosmoplitian" எனும் நூலின் அறிமுகவுரையை திருமதி சாந்தி விக்கினராஜா நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து 'சுதேச நாட்டியமும் கல்லடி வேலனும்' எனும் தலைப்பில் வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சோ. கிருஷ்ணகுமார் உரையாற்றவுள்ளார்.

எனவே ஏ.ஜே.யின் அபிமானிகள், நண்பர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் வருகை தரும்படி யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-6)

## சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு அபராதம்

(யாழப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக மதுபானம் உற்பத்தியில் ஈடுபட்டமை மற்றும் அனுமதியின்றி மதுபானம் விற்றமை போன்ற குற்றங்களில் ஈடுபட்டு வந்த ஏழுபேர் நேற்று யாழ். மதுவலித் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு யாழ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரித்த பதில் நீதவான் க.கேசவன் அவர்களுக்கு 37 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இதேவேளை சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்டு யாழ். பொலிஸ் நிலைய சிறு குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட இருவரை விசாரித்த பதில் நீதவான் க. கேசவன் குற்றவாளிகளுக்கு ரூபா. 75 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஓ-6)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை தமிழ்மொழியும் இலக்கியமும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு நாளை மறுநாள் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் ,தரம் 8ற்கு சைவ சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் காலை 8 மணிக்கு நடைபெறும் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.


அத்துடன் மேற் குறிப்பிட்ட செயலமர்வுகளில் அவ்வவ் பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். (ஓ)

## ஒன்றுகூடல் மற்றும் பிரியாவிடை நிகழ்வுகள்

தென்மராட்சி கல்வி வலய ஊழியர் நலன்புரிக் கழகத்தினரின் வருட இறுதி ஒன்று கூடல் விழாவும் இளைப்பாறிச் செல்லும் நிர்வாக உத்தியோகத்தர் க. சரவணபவனின் பிரியாவிடை நிகழ்வும் எதிர்வரும்24 ஆம் திகதி புதன் கிழமை 12 மணிக்கு வலயக்கல்வி அலுவலக மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக நலன்புரிக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஓ-29)

## காலாவதியான மென்பான போத்தல்கள் கைப்பற்றப்பட்டன

சாவகச்சேரி நகர வர்த்தக நிலையங்களில் சுகாதார பரிசோதகர்கள் மேற் கொண்ட திடீர் பரிசோதனையில் கா ல ம் கடந்த நூற்றுக்கு மேற்பட்ட மென் பானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.1 ½ மற்றும் ½ லீற்றர் கொண்ட மென் பானப் போத்தல்களே கைப்பற்றப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். (ஓ-29)

அண்மையில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிடையே நடாத்தப்பெற்ற சைவசமய அறிவு, மாலை கட்டல்,கோலம்போடல் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வை சைவசமய ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கம் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதனையும்,

பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், கலந்து கொண்ட விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.

(படம்:சாவ.நிருபர்)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்

10 . 01 . 1966





விண்ணில்

01 . 01 . 2008



## அமரர் திரு. தியாகராசா மகேஸ்வரன்

**(முன்னாள் இந்துசமய விவகார அமைச்சர் யாழ் மாவட்ட மற்றும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)**

அன்பு சொரியும் அப்பா ஆனந்தம்
அளிக்கும் அப்பா இன்பம்
தரும் அப்பா எங்கள் இனிய
அப்பா பொன் பொருள்
எல்லார்க்கும் வழங்கும் அப்பா எங்களை
அற்றைத் திங்கள் அம்மார்கழி நாளில்
திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் நடராசரை
தரிசிக்க அழைத்துச் சென்றாரே ஐயனார்
வெள்ளோட்டம் பார்த்து அடுத்தநாள் பஞ்சரதம்
இழுத்து அதிகாலை ஆருத்திரா தரிசனம்
கண்ணாரக் கண்டு தூது தீர்த்தம்
தீபம் தரிசித்து ஐயனார் புராணம்
வெளியீடும் கண்டு அன்னதானம் அன்பாய்
செய்து காரைநகர் மக்கள் ஆனந்தக்
கூத்தனை தரிசிக்க வந்த அயலூர் மக்கள்
அனைவருடனும் அன்புடன் கலந்து ஆனந்தமாய்
வீடு திரும்பினோமே! இற்றைத் திங்கள்
இம்மார்கழி நாளில் எங்கள் அருமை அப்பாவை
எங்கள் ஆசை அப்பாவை காணாது திகைக்கின்றோம்
திக்குத்தெரியாது திசைமாறி நிற்கின்றோம்
பாதை தெரியாது பரிதவித்து நிற்கின்றோம்
தலைவன் இல்லாது தனித்து நிற்கின்றோம்
பன்னிரண்டு மாதம் பரிதவித்து நிற்கின்றோம்
அப்பா உங்களைப்பார்க்க விருப்பமப்பா
அப்பா உங்களை காண விருப்பமப்பா
நேச அப்பா உங்கள் நினைவால்
நெஞ்சம் புண்ணாகி நினைவு இழக்கின்றோம்
இற்றைத்திங்கள் இம்மார்கழி வந்ததப்பா
ஈழத்து சிதம்பரம் செல்வது இல்லையோ
பஞ்சதேர் வடம் இழுப்பது இல்லையோ
பன்னீர்,பூக்கள், திரவியங்கள் எங்கேயப்பா
அன்னதானம் அன்புடன் போடுவது இல்லையோ
ஆருத்திரா தரிசனம் தீர்த்தம் தூது தரிசனம் இல்லையோ
அப்பா அப்பா தாரா அழைக்கின்றேன்
அன்பாக விடை தாரும் அப்பா
ஆனந்தக்கூத்தனிடம் தனியாகச்செல்வீரோ
ஆனந்த நடனம் அழகாய் காண்பீரோ
பொன்னம்பல வாணர் தரிசனம் பெற்றீரே
பிறவி ஒழிந்து பேரின்பம் பெறுக அப்பா
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஈழத்துச்சிதம்பர தரிசனம் செல்வதில்லையா?

**பவதாரணி மகேஸ்வரன்**

தங்கமான எங்கள் ஆசை அப்பா
கம்பீரமாய் சிவனைக் கும்பிடச் சென்றீரே
கும்பிட்டு வரும்போது கூற்றுவன் கொடிய
துவக்கால் சுட்டனனே! சின்னக் குழந்தைகளென
சிந்திக்காது பச்சைக்குழந்தைகளிடத்து பரிதாபமில்லாது
பிஞ்சுக் குழந்தைகள் பேதலித்து நிற்க
சின்ன வயதிலேயே அப்பாவைச் சாகடித்தனரே!
கொடிது! கொடிது! அப்பா இந்தக் கொடுமை
அன்று முதலாக அப்பாவைக் காணவில்லை
அன்பான பேச்சை நாங்கள் கேட்கவில்லை
கொஞ்சி மகிழவில்லை கூடிச்செல்லவில்லை
பெற்று வளர்த்த அப்பா பெயரிட்ட அப்பா
வளர்த்த அருமை அப்பா வரிசையிட்ட
நேச அப்பா தொடர்ந்து பேணி வளர்க்காது
பெரியவர் ஆக்காது பெருமை பார்க்காது
ஐந்து வயதிலேயே அகன்ற மர்மம் என்ன?
சின்ன வயதிலேயே சென்ற மர்மம் என்ன?
பிஞ்சு வயதிலேயே பிரிந்த மர்மம் என்ன?
இச்செயல் கொடிது! கொடிது! அப்பா
அதனிலும் கொடிது! அப்பா இன்று
பச்சைப் பாலகனாய் பக்குவமாய் உமைநினைத்து
பன்னிரண்டு மாதங்கள் முட்டுக்கால் குந்தி
அறுகெடுத்துப் பூசை செய்யும் அர்ச்சுனனாய்
வில்வம் எடுத்துப் பூசை செய்யும் விசயனாய்
பூ எடுத்து பூசை செய்யும் புண்ணியனாய்
அறுசுவை உண்டி அன்பாய் படைத்து
பத்துவித பட்சணங்கள் பாங்காய் படைத்து
எள்ளும் தண்ணீரும் கடலில் இறைத்து
என்னப்பா பூசனையால் உங்களை ஈசனாக்கி
இதயம் நெக்குருக இப்பணிகள் தொடர்வதென்ன?
நீங்கள் அள்ளி அணைத்து அன்புசொரியும்
பிரணவன் பாடுகிறேன் பேசாது இருப்பதென்ன?
கோளாறு இருப்பது என்ன? வாராது இருப்பது என்ன?
கொடிது! கொடிது! அப்பா நேச அப்பா
பித்தன் சிவனுடன் பேதமறக் கலந்தீரோ
அன்பன் சிவன் பேரருளில் அழகாய் கலந்தீரே.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அப்பா பூசனையால் ஈசனாக்கி போற்றுகின்றேன்

**பிரணவன் மகேஸ்வரன்**

பிராமணத்தி பிராமணத்தி என்று பேரன்பு
சொரியும் எங்களைப் பெற்ற அப்பா
பக்குவமாய் பல இடங்கள் கூட்டிச்செல்லும் அப்பா
பாலூட்டி சோறூட்டி பண்டங்கள் தந்து
மார்பிலும் தோளிலும் சீராட்டி மகிழ்வூட்டும் அப்பா
கொஞ்சிக்குலாவிக் கூடிமகிழும் அப்பா
அப்பாவைக் காணாமல் பவித்திரா அழுகின்றேன்
பெற்றவரை காணாது புலம்புகின்றேன் அப்பா
பச்சைக்குழந்தைகளை பசுமையாய் வளர்க்காது
சின்னக் குழந்தைகளைச் செல்லமாய் வளர்க்காது
பட்டம் பெறும்போது பக்கம் இருக்காது
ஈழத்துச் சிதம்பரத்திற்கு எங்களைக் கூட்டிச்செல்லாது
கண்ணீர் துடைக்காது கவலை ஆற்றாது
சொற்ப வயதிலே சென்ற இடம் எங்கே?
சிவனாரைச் சேவித்துச் செல்வங்களை மறந்தீரோ?
ஆனந்தக்கூத்தனோடு அன்பாய் கலந்திடுவீர்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அப்பாவைக்காணாமல் அழுகின்றேன்.

**பவித்திரா மகேஸ்வரன்**



அமரர் தி. மகேஸ்வரனின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை 21ஆம் திகதி காலை 9.30 மணிக்கு காரைநகர் ஈழத்து சிதம்பர அறப்பணி நிலைய மண்டபத்தில் பஜனை, நினைவுப்பேருரை நூல் வெளியீடு என்பன இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுக்கு அனைவரையும் அன்புடன் அழைப்பதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**திருமதி. விஜயகலா மகேஸ்வரன் குழந்தைகள் குடும்பத்தினர்**

**276, பலாலி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்**

# இலங்கையில் தமிழர் 17

இச் செல்வாக்குகளுடன் தமிழ்மொழியின் பரம்பலும் அடங்கும் எனலாம். தமிழ் பேசும் வணிகர் வட இலங்கையில் உயர் குழாத்தினர் நிலையைப் பெற்று அங்கு ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியதும், அவர்கள் மொழி முன் அங்கு பேசப்பட்ட மொழிகளுக்குப் பதிலாக அங்கு வாழ்ந்தோர் தாய் மொழியாக மாறும் போக்கு உருவாகியது என்று கொள்ளலாம். தமிழ்மொழி வட இலங்கையில் நிலை பெறுவதற்குச் சாதகமான வகையில் தமிழ்பேசும் பிரதேசமான தமிழ்நாடு மிகவும் அண்மையில் இருந்தமையும் அங்கு காலத்திற்குக் காலம் மேலாதிக்கமுடைய அரசியல் அமைப்புக்கள் தோன்றியமையும் வட இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் தொகையை மேலும் அதிகரிக்கவும் வலுப்படுத்தவும் உதவிய காரணிகள் எனலாம்.

இதனால்,சிங்களம் பேசும் பெரும்பான்மை இனக்குழுவுக்குள் தமிழ்பேசும் இனக்குழு கலந்து மறைவதற்கு இக் காரணிகள் சாதகமாக அமையவில்லை.ஆனால் இலங்கையில் தென்பாகத்தில் வாழ்ந்த தமிழர் சிங்கள இனக் குழுவுக்குள் காலப் போக்கில் உள்வாங்கப்பட்டனர்.

இத்கைய போக்கு நவீன காலம் வரை காணப்படும் ஒரு வரலாற்றுப் போக்காகும். வடக்கு மற்றும் வடமேற்கு, வட கிழக்குப் பகுதிகளில் தெலுங்கர், கேரளர், கன்னடர் உட்பட பல்வேறு இனக்குழுக்கள் (பிற்பட்ட காலத்தில் சாவகர் அல்லது மலாய் இனத்தவரும் கூட) தமிழ்பேசுவோர் ஆதிக்கத் திற்கு உட்பட்டனர். இந்த இனங்கள் எல்லாம் ஒன்றிணைந்து ஒரு தனித்துவமான தமிழர் இனக்குழு உருவாக உதவின.

### இடைக்கற்காலம் தொட்டு மக்கள் தொடர்ச்சி

பிராகிருதமொழிகளும் தமிழ்மொழியும், பௌத்த மதமும் இந்துமதமும் பரவியதன் விளைவாகப் பாரிய பண்பாட்டு மாற்றங்கள் நாட்டில் ஏற்பட்டாலும், நாட்டு மக்கள் அடிப்படையில் தொடர்ந்து (புதிய மக்கள் வருகையால் அழிக்கப்படாது) தற்காலம் வரை இருப்பதையே காணலாம்.

இந்த 'உயிரியல் தொடர்ச்சி' (biological continuum) பற்றி மேலும் ஆய்வு நடத்த வேண்டிய தேவை இருப்பினும், இதுவரை கிடைத்துள்ள தொல் லியல் மற்றும் மானிடவியல் சான்றுகள் ஒரு முக்கிய விசயத்தைக் காட்டிநிற்கின்றன.

அதாவது, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்கள் நவீன கால இலங்கை மக்களின் மூதாதையர் என்பது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மக்களின் வழித் தோன்றல்கள் காலத்துக்குக் காலம் புலம் பெயர்ந்து வந்த மக்களுடன் கலந்து தொடர்ச்சியாக தற்காலம் வரை இருந்துள்ளனர். அப்படிப் பார்க்கும் இடத்து, இலங்கைத்தமிழர் மற்றும் சிங்களவர் ஆகிய இரு இனக்குழுக்களின் முன்னோர்கள் பிராகிருதமும் தமிழும் பரவுமுன் இலங்கையில் வாழ்ந்தவர்கள் என்று கூறலாம்.

***இலங்கை வரலாற்றுக்கு ஒரு ப்ரந்த புவியியல் பின்னணியில் விளக்கம் கொடுத்தல்***

ஆதி இலங்கையில் காணப்படும் முன்னேற்றங்களைத் தென்னாசியா மற்றும் தென் கிழக்காசியா ஆகிய பரந்த நிலப்பரப்பில் இடம்பெற்ற முன்னேற்றங்களின் பின்னணியில் வைத்து விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

நீண்டகாலமாக இலங்கை வரலாற்றை எழுதிய பலர் ஒரு குறுகிய நோக்குடன் இலங்கைக்கு அப்பால் நடைபெற்ற நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுத்தாது,இலங்கை வரலாற்றை அணுகியுள்ளனர். இதனால் இலங்கையில் நடைபெற்ற மாற்றங்களுக்கு சரியான விளக்கங்களைக் கொடுக்கமுடியாத நிலை காணப்பட்டது.

அண்மைக்காலத்தில் இப்போக்கு மாறத் தொடங்கியுள்ளது.பேராசிரியர் சூதர்ஷன் செனெவிரத்ன மற்றும் பேராசிரியர் லெஸ்லி குணவர்தன ஆகியோர் இலங்கையில் ஏற்பட்ட முன்னேற்றங்களை தென்னிந்தியாவில் இடம்பெற்ற மாற்றங்களுடன் இணைத்து ஆய்வு செய்தனர். இவர்கள் இருவரும் சிங்கள, பாளி வரலாற்று ஆதாரங்களுடன் தமிழ் வரலாற்று ஆதாரங்களையும் பயன்படுத்தி வரலாறு எழுதியுள்ளனர்.

இதனால் இலங்கை வரலாற்றியலில் புதிய நோக்குகளுக்கு இவர்கள் வழிவகுத்துள்ளனர்.

இலங்கை வரலாற்றை விளங்கிக் கொள்ளத் தென்னாசியப் பின்னணி முக்கியத்துவம் பெறுவது போல, தென்கிழக்காசியப் பின்னணியும் இதற்குத் தேவைப்படுகின்றது. சிறப்பாக, வரலாற்றுக்கு முற்பட்ட கால முன்னேற்றங்களையும் வரலாற்றுத் தொடக்க கால முன்னேற்றங்களையும் விளங்கிக் கொள்ளத் தென்கிழக்காசிய பின்னணி முக்கியமானது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தென் கிழக்காசியாவிலிருந்து ஆஸ்திரோ-ஆசிய மொழி பேசியோரும் ஆஸ்திரோனீசிய மொழி பேசியோரும் பல திசைகளில் நெடுந்தூரம் புலம்பெயர்ந்துள்ளனர்.



இவர்கள் மேற்கு நோக்கி புலம்பெயர்ந்த போது இந்து சமுத் திரத்தைக் கடந்து ஆபிரிக்காவின் அருகில் உள்ள மடகாஸ்கார் தீவு வரை சென்றுள்ளனர். அப்படிச் சென்ற போது இலங்கைத் தீவையும் சிலர் அடைந்திருக்கலாம்.

இற்றைக்கு 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து தென்கிழக்காசிய மக்கள் புலம் பெயர்ந்து ஆஸ்திரேலியா, பொலினீசியா மற்றும் மைக்கிரோனீசியா ஆகிய தூர இடங்களுக்குச் சென்றுள்ளனர். அத்தகைய நீண்ட புலப்பெயர்ச்சியின்போது அவர்கள் இலங்கைக்கும் சென்றிருக்கலாம்.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

ஆஸ்திரோ - ஆசிய மொழி பேசியோர் தென்கிழக் காசியாவிலிருந்து மேற்குநோக்கி புலம் பெயர்ந்து இந்தியாவின் கிழக்குப் பகுதிகளுக் குச் சென்றனர் என்பது அங்கு பேசப்படும் முண்டா மொழிகள் மூலம் உறுதியாகின் றது.

இலங்கையில் ஆதியில் வாழ்ந்த வேடர் குழுவின் முன்னோர் முண்டாமொழி பேசுவோராய் இருந்திருக்கலாம் என ஸிரான் தரணியகல கருதுகிறார். (தொடரும்)

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்,கலாநிதி ம.இரகுநாதன், கலாநிதி சி.சிவநிர்த்தானந்தா ஆகியோரின் தொகுப்பில் உருவான " தமிழ் நாவல்கள்-மீள் பார்வை" எனும் நூல் வெளியீடு பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் கடந்த அக்டோபர் மாதம் கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்,கலாநிதி மகேஸ்வரன், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கம்பவாரிதி இ.ஜெயராஜ், கலாநிதி ரகுபரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், மூத்த எழுத்தாளர் மல்லிகை டொமினிக் ஜீவா உரையாற்றுவதையும்,அவருக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் மாலை அணிவித்து பொற்கிழி வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# மாணவர்கள் பரீட்சைகளை வெற்றிகொள்வது எவ்வாறு? ③

Survey - ஆய்வு செய்தலில் படிக்க வேண்டியவற்றை விரைவாகவும் மேலோட்டமாகவும் பார்வையிடுங்கள். தலைப்பு, உப தலைப்பு, பகுதிகள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு முழுமை பற்றிய உணர்வை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

Question - வினாவுதல் நீங்கள் படிக்கும் பாடம் தொடர்பான வினாக்களை உருவாக்கி கொள்ளுங்கள்.

உதாரணமாக வியாழன் என்ற கோளைப் பற்றி வாசிப்பதாக இருப்பின் அதன் மேற்பரப்பு எவ்வாறானது? அதற்கு வளிமண்டலம் உண்டா? அது எவ்வாறானது? அங்கு உயிரினங்கள் வாழ்கின்றனவா? போன்ற வினாக்களை உருவாக்கி அதை ஒரு குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொள்ளுங்கள். இவ்வாறு வினாக்களை உருவாக்கிக் கொள் வதால் அவற்றிற்கு விடை காணக்கூடியவாறு விடயங்களை தர்க்க ரீதியில் ஒழுங்கு முறைப்படி ஞாபகத்தில் வைத்துக் கொள்ள உதவும்.

Read - வாசித்து விளங்கு. உங்கள் வினாக்களுக்கு விடை தேடியபடி வாசியுங்கள். வாசிப்பதை நன்றாகப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

Reate- சொல்லிப் பார்த்தல் - ஒரு சிறு பகுதியை வாசித்தபின் சற்று நிதானித்து நீங்கள் படித்து விளங்கிக் கொண்டதை உங்களால் திறம்பட சொல்ல முடியுமா என்று முயற்சி செய்து பாருங்கள். சொல்லுக்குச் சொல்லாக பாடம் ஒப்புவிக்கத் தேவை இல்லை.

Revice - மீண்டும் மீட்டல் செய்தல் இதன் போது சில விடயங்கள் நினைவுக்கு வராமல் இருந்திருக்கலாம். வாசித்த பகுதிக்கு மீண்டும் சென்று உங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்யலாம். மீண்டும் அந்தப் பகுதியை உங்களால் சரியாகச் சீராக மீட்டல் செய்தால் அதிக மனனம் செய்யவேண்டும் என்ற சுமை இராது.

வாரமுடிவில் அல்லது அத்தியாயம் முடிவுறும் போது இதுவரை படித்தவற்றை விரைவாக மீட்டல் செய்யுங்கள்.

தற்பொழுது Sq3R+U என்று U-Use பயன்படுத்து என்று படியையும் சேர்த்துக் கூறுவர். இதில் நீங்கள் கற்றதை உறுதி செய்வதற்கு

1. கற்றதை பிறருக்கு கற்பியுங்கள்.
2. கற்றது பற்றி குழுவாகக் கலந்துரையாடுங்கள்.
3. கற்றது தொடர்பான பயிற்சிகள், கடந்தகால வினாக்களை செய்து பாருங்கள்.

இதில் Sq3R+U முறையைப் பற்றி கற்பீர்களானால் பாடங்கள் மறக்கப்படும் அளவு குறைவடையும், கற்பதும் இலகுவாக்கப்படும்.

எனவே, நினைவாற்றலை நீங்கள் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

- முதலில் படிப்பதற்கான சூழ்நிலையை அமைத்துக் கொள்ளுங்கள்.
- படிப்பதை ஓய்வாக இருக்கும் போதெல்லாம் நினைத்துப் பாருங்கள்.
- படிப்பதை விருப்பத்தோடும் உரிய நோக்கத்தோடும் படியுங்கள்.
- ஆர்வத்துடன் கூடிய கவனம் மிக மிக அவசியம்.

நீங்கள் படிப்பதன் மூலம் 10%-15%உம்,
கேட்பதன் மூலம் 20% -25% உம்,
பார்த்து அறிதல் மூலம் 30%-35%உம்,
பார்த்தவுடன் கேட்டு அறிகின்ற போது 50% உம், எல்லாப் புலன்களும் பங்கேற்கும் வகையில் ஈடுபாட்டுடன் கற்கும்போது 90% நினைவில் நிற்கும்.

இதனால் தான் கதைப் புத்தகம் வாசிக்கும் போது அதிக நாட்கள் நினைவில் இருக்கின்றது.எனவே படிக்கும் பொழுது எல்லாப் புலன் அங்கங்களும் பங்கேற்கும் வகையில் படியுங்கள்.அடுத்து உங்களின் பரீட்சை வெற்றி தனித்து திறமையாக படிப்பதில் மட்டுமல்லாத பரீட்சை வினாக்களை தெரிவு செய்வதிலும் விடை எழுதும் முறையிலும் தங்கியுள்ளது.

எனவே பரீட்சையின் போது

- விடை எழுத முன் முதல் 5 நிமிடங்கள் வினாக் கள் யாவற்றையும் வாசியுங்கள்.
- இலகுவாக விடை எழுதக் கூடிய வினாக்களை ஒழுங்குபடுத்துங்கள்.
- விடை எழுதக் கூடிய நேரத்தை கணிப்பிடுங்கள்.
- வினாக்களின் தன்மைக்கேற்ப விடையளியுங்கள்.

**திருமதி மலர்விழி வெங்கடறமணா**
B.Sc.(Hons)
ஆசிரியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

- விடைகளை மீள ஒருமுறை சரி பாருங்கள்.

படித்ததை ஞாபகத்தில் இருத்தி அதனை உரிய இடத்தில் உரிய விதமாக பிரயோகிப்பதிலேயே உங்களின் பரீட்சை வெற்றி தங்கியுள்ளது. (முற்றும்)

# 9வது ஆண்டு நிறைவில் வலம்புரியை வாழ்த்துவோர்


வலம்புரியின் சேவை மேன்மேலும் வளர எமது நல்வாழ்த்துக்கள்

புத்தம் புதிய துவிச்சக்கரவண்டிகள், T.V, டெக் வகைகள், றேடியோவகைகள், அவற்றிற்கான உதரிப்பாகங்கள், அன்ரனா வகைகள் போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்**

இல-50,52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:- 222 2988, 3096
Fax:- 222 2368

வலம்புரியின் நற்பணி தொடர எமது நல்வாழ்த்துக்கள்.

உங்களது நன்மதிப்புப் பெற்ற பிறீடம் எல்.எம்.எல். ஸ்கூட்டர் சைக்கிள் , விவசாய உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**S.P.N. MOTORS**

**எஸ்.பீ.என். மோட்டர்ஸ்**

171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வையகம் எங்கும் வலம்புரி வலம் வர வாழ்த்துகிறோம்

PEPSI

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

**கஜமுகன் ஹாட்வெயர்**

147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே. 222 2833 ,222 7144

உலகுக்கு ஒளியாய் வலம்வர வலம்புரிக்கு எமது வாழ்த்துக்கள்.

PCP
the path to computer paradigm
Pc Park (Pvt) Ltd

Pc Park (Pvt) Ltd
130A,Galle Road,
Dehiwala,
T.P.0112714115
Fax:-0112713423

Pc Park (Pvt) Ltd
Technical Division
46A,46B,46C,WaithiyaRoad,
Dehiwala,
Hotline.0773951635

Pc Park (Pvt) Ltd
633,K.K.S.Road, Jaffna.
T.P:.021 222 9581
Fax:-0212229581

Pc Park (Pvt) Ltd
Pointpedro Road, Nelliyadi.
T.P:.021 222 64828
Fax:-0212229581

Web:-www Pc Park.lk E.mail: info@pcpark.lk,
Jaffna@pcpark.lk,

10ஆவது ஆண்டில் காலடி வைக்கும் வலம்புரிக்கு எமது நல்வாழ்த்துக்கள்

யாழ். மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

FedEx
Express

அதிரடி விலைக்கழிவுகளுடன் உள்நாட்டு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் , பொதிகள் சேவை
உள்நாட்டு , வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப்பொருட்கள் , உணவுப்பொருட்கள் ,
உடுபுடவைகள் மற்றும் வீடியோ பிரதிகள் , சீடிகள் ஏற்றுக்கொள்ளப்படும்

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே. 222 7835(ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக

46 ,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

# 9வது ஆண்டு நிறைவில் வலம்புரியை வாழ்த்துவோர்


10ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் வலம்புரியின்
உன்னத சேவை தொடர வாழ்த்துக்கள்

முதலீடு செய்வதற்கு தீர்மானிக்கும் போது , நிதி நிறுவனத்தின் ஸ்திரத்தன்மை, நம்பிக்கை என்பவற்றில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்பதை மீண்டும் ஞாபகப்படுத்தும் முகமாக பண வைப்பாளர்களுக்கு மிக உயர்ந்த பாதுகாப்பை வழுங்குவதில் முன்னணி நிலையை நிரூபித்துள்ள

**கொமர்ஷல் வங்கியே ! உலகின் உச்ச ஸ்தான 1000 வங்கிகளுக்குள் இணைக்கப்பட்டுள்ள முதலாவது இலங்கையின் வங்கி**

நிதியியல்துறையில் நிதி உறுதிப்பாட்டை அளவிடும் காரணியான படி ஒன்று மூலதனத்தின் உறுதியான அடித்தளம், ஸ்திரத்தன்மை , மூலதன நிறைவு போன்ற காரணிகளால், உலக வங்கித்துறையில் முன்னிலையில் உள்ள 1000 தலை சிறந்த வங்கிகளுக்குள் கொமர்ஷல் வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான உலகின் தலை சிறந்த வங்கி தரப்படுத் தலுக்குள் சேர்ந்து கொண்ட முதலாவது இலங்கையின் வங்கியே கொமர்ஷல் வங்கி.

உலகின் நிதித்துறை சமூகம் உலகில் உயர்ஸ்தான வங்கி தரப்படுத்தல் பட்டியலை கூர்ந்து அவதானித்த வண்ணம் இருக்கின்றது. இத்தரப்படுத்தலை தேர்ந்தெடுத்து தொகுத்து வெளியிடுவது ஐக்கிய இராச்சியத்தின் முதற்தர நிதியியல் சஞ்சிகையான "த பாங்கர்" இவ்வாறான தரப்படுத்தல் எமது வாடிக்கையா ளர்க ளுக்கு சிறந்ததொரு உறுதிப்பாட்டினை மீள வலியுறுத்தும் அதே சமயத்தில் இவ்விருது எமது ஊழியர்களுக்கு பெருமையையும் உயர் தர வங்கியியல் தரத்தை பேணுவதற்கும் உந்து சக்தியையும் வழுங்குகின்றது.





கிறிஸ்மஸ் முதல்
முதன் முறையாக யாழ் மாவட்டத்தில்....
மாபெரும் பரிசுகளுடன்

கிறிஸ்மஸ் மற்றும்
புதுவருடத்தினை முன்னிட்டு

என்றுமே இல்லாதவாறு குறைந்த கட்டுப்பணத்தில் கூடிய காப்புறுதித் தொகை

பொங்கல் வரை

**சிறிலங்கா இன்சூரன்ஸ்**
**MAK Cost Cutter Super Market**

இணைந்து நடத்தும் மாபெரும் விற்பனைத் திருவிழா

SRI LANKA LIFE
மினிமுத்து
குழந்தைகளுக்கான திட்டம்

விரையுங்கள்
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும்
அதிகூடிய பங்குலாபம்

**18.12.2008 முதல் 18.01.2009 வரை**

உங்கள் காலாவதியான காப்புறுதிப் பத்திரங்களை புதுப்பிக்க ஒரு சந்தர்ப்பம்

*You are Safer with the Leader*

வருட இறுதியில் மாபெரும் சீட்டிழுப்பில் 2 மில்லியன் ரூபா வரையான பரிசில்கள் (நிபந்தனைகளிற்குட்பட்டது)



**சேவை நிலைத்திட வாழ்த்துகிறோம்**

பத்திரிகைத் துறையில் வட இலங்கையில் கடந்த 9 ஆண்டுகளாக காத்திரமான ஓர் பங்களிப்பினை வழங்கி 10ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் வலம்புரி பத்திரிகை நிறுவனம் மென்மேலும் வளர IIS சமூகத்தின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**IIS City Campus**

200, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:-021 222 8060
தொலைநகல்:-021 222 6933
மின்னஞ்சல்:-iiscc @sltnet.lk



**யாழ். நகரின் மத்தியில் ஓர் புதிய உதயம்**

மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி. ஆரம்ப வகுப்பு முதல் அனைத்து வகுப்புகளுக்குமுரிய பிரபல ஆசிரியர்களின் தமிழ் ஆங்கில (ENGLISH MEDIUM) மொழி மூலமான புத்தகங்கள், பயிற்சிகள், வினாப்பத்திரங்கள், மருத்துவ தமிழ், ஆங்கில, சிங்கள அகராதிகள், காகிதாதிகள் பாடசாலை உபகரணங்கள் உட்பட இலங்கை இந்திய நாவல்கள், சஞ்சிகைகள்... உங்கள் தேவைகள் அனைத்தையும் நீங்களே தெரிவு செய்து பெற்றிடக் கூடிய வகை யில் (விசாலமான இடவசதி) காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.பிந்திய பதிப்புகளை முந்திப்பெறக் கூடிய வகையில் விரைவான விநியோகம், வினாப்பத்திரங்களை தபால் மூலம் பெறக்கூடிய வசதி,நியாயவிலை அத்துடன் விசேட விலைக்கழிவு

**அன்னை புத்தகசாலை**

இல:7 நவீன சந்தைஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:- 222 9881



வாசகர் நெஞ்சங்களுக்கு
வழி காட்டும் வலம்புரியின் பணி தொடர எமது
வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

கூட்டுறவே நாட்டுயர்வு

**நுகர்ச்சிப் பொருட்கள், பல்நோக்குச் சேவைகள் என்பவற்றை வழங்கும் கூட்டுறவு அமைப்பு.**

**கட்டைவேலி - நெல்லியடி**
**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

நெல்லியடி -கரவெட்டி



நடுநிலை தவறாத நன்னெறி காக்கும்
உன் பணி தொடர வாழ்த்துகிறோம்.

**ஈஸ்வரன் றேடர்ஸ்**

சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும் கண்ணைக் கவரும் சிறுவர்களுக்கான சைக்கிள்கள் அனைத்தையும் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம் .

இல: 69 ,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2813

# வலம்புரியின் 9-வது ஆண்டு நிறை

## நடுநிலை தவறாத நாளிதழ்



யாழ்ப்பாணத்தில் வெளிவரும் வலம்புரி நாளிதழ் இன்று தனது 9 ஆவது அகவை நிறைவு செய்வதை யிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். மக்களின் தேவைகளில் மிகவும் விரும்பத்தக்கதாக இருப்பது ஊடகங்கள். இந்நிலையில் பத்திரிகை மனித இனத் தின் முழுத்தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன.
நடுநிலை தவறாது நன்னெறிகாக்கும் வலம்புரிப் பத்திரிகை தமிழ் மக்களின் மனதில் நீங்கா இடம்பிடித்துள்ளது. பத்திரிகைச் செய்திகளே அரசியல், பொருளாதாரம், சமயம் போன்ற விடயங்களை தெளிவாகச் சுட்டிக்காட்டுவது வலம்புரியின் தனித்துவம். ஆசிரியர் தலையங்கம், இன்று ஒரு தகவல், தரிசனம் க.சி.குலரட்னம் எழுதிய அரசியல் போன்ற விடயங்கள் அனைவரின் மனதையும் கவர்ந்துள்ளது. பல துன்பங்களையும் சுமந்து 9 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றிய வலம்புரிப் பத்திரிகை இன்னும் பல்லாண்டு காலம் பல வளர்ச்சிகளைக் கண்டு பணியாற்ற நல்லைக் கந்தன் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

இரண்டாவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

(நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்-நல்லூர்)

## உடனுக்குடன் செய்திகளைத்தந்து மக்கள் மனம் கவர்ந்த நாளிதழ்



மக்கள் மனங்கவர்ந்த நாளிதழாம் மக்களின் குரலாக வெளிவரும் வலம்புரி தனது 9ஆவது அகவையை நிறைவு செய்து 10 ஆவது அகவையில் காலடிவைப் பதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். மக்களின் தேவைகளை எழுத்து வடிவில் உடனுக்குடன் வழங்கும் வலம்புரி எம்மக்களின் மனங்களில் தனக்கெனவோர் தனியிடத்தைப் பிடித்துள்ளது.
வளப்பற்றாக்குறை, பொருளாதார நெருக்கடி போன்ற சூழ்நிலையிலும் கட்டுரைகள், பரீட்சை வழிகாட்டிகள், நற்சிந்தனைகள், ஆன்மீக அம்சங்கள் எனப்பல விடயங்களை தாங்கி வருவது வலம்புரியேயாகும். அதுமட்டுமன்றி இணையச்செய்திகள், பதவி வெற்றிடங்கள், நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் விபரம், நியமனம் கிடைக்கப் பெற்றோர் விபரம் போன்றவற்றை உடனுக்குடன் வெளியிடும் பத்திரிகை வலம்புரியே.


வளர்ச்சிப் பாதையில் வீறுநடை போட்டுக்கொண்டிருக்கும் வலம்புரி, 2009 ஆம் ஆண்டின் சிறந்த பத்திரிகைக்கான விருதினை பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் எனது ஆசிகளைக் கூறிக்கொள்வதுடன்,

10ஆவது ஆண்டில் வீறு நடை போட வழிசமைத்த ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் அனைவரதும் வாழ்வு வளம் பெறவும் எனது இனிய நல்லாசிகளைத் தெரிவிப்பதோடு வல்வை நகரின் காவல் தெய்வமாக விளங்கும் ஸ்ரீ முத்துமாரித்தாயின் திருவருளும், குருவருளும் இணைய வேண்டும் என பிரார்த்தித்து வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன்.

சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் - ஜே.பி

(பிரதமகுரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், சிவாச்சார்ய பீடாதிபதி, அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்)

## மக்கள் மனங்களில் வலம் வரும் வலம்புரியே வாழ்க உன்பணி வளர்க வளமுடன்



நடுநிலை தவறாது நன்னெறி காக்கும் வலம்புரி 9ஆம் ஆண்டை நிறைவுசெய்து 10ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் நேரத்தில் இதுவரைபட்ட, கடந்து வந்த பல்வேறு சோதனை களையும் நல்லதொரு அனுபவப்பாடமாகக் கொண்டு எதிர்காலத்திலும் தான் கொண்ட இலட்சியத்தில் நின்று வழுவாது எம்மக்கட்குப் பல்துறைப்பட்ட செய்திகளையும் கலை, இலக்கிய, ஆன்மீக, விஞ்ஞான, தொழில்நுட்ப ஆக்கங்களையும் சிறப்புறத்தந்து எதிர்கால சந்ததியினருக்கும் நல்லதொரு வழிகாட்டியாக திகழவேண்டு மென மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்.
வலம்புரியின் நற்பணி பத்திரிகை உலகில் நின்று நிலைத்துப் பல்லாண்டுகள் சிறப்புடன் வாழ ஆண்டு 9ள நிறைவில் அன்புடன் வாழ்த்துகின்றோம்.

சிவஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள்

(நீர்வை!மணி)

## மனம் நிறைந்த ஆசிகள்



வலம்புரி நாளிதழின் 9 ஆவது அகவை நிறைவை முன்னிட்டு எனது ஆசிகளையும் வாழ்த்துக் களையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.
இக்காலகட்டத்திலும் மக்களுக்கு அன்றாட நிகழ்ச்சி களையும் செய்திகளையும் உடனுக்குடன் தெரியப்படுத் துவதில் முதன்மையான பத்திரிகையாக வலம்புரி வெளிப்படுவது மிகவும் போற்றப்படக்கூடிய விடயம்.
காலையில் ஒவ்வொரு மக்களின் கரங்களில் வலம்புரி பத்திரிகையைக் காணும்போது சாட்சாத் மகாவிஷ்ணுவே மக்களின் மனங்களிலே குவிந்திருப்பதாக உணரமுடிகிறது. பத்திரிகா லக்சன முறைப்படி விதியாகவும் நேர்மையாகவும் உன்மையான செய்திகளை மக்களுக்கு அளிப்பதுடன் சமய சமூக சேவைகளையும் ஆற்றிவருவது மேலும் போற்றப்படவேண்டிய முக்கிய அம்சம்.

ஆகவே, மென்மேலும் வலம்புரி பத்திரிகை நவீன முறைப்படி மக்களுக்கு ஆக்கவேண்டிய சேவைகளைச் செய்வதற்கு தொழிலதிபர், உத்தி யோகத்தர்கள் முதலானோருக்கு ஊக்கமளித்து வலம்புரியை வளர்க்க எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்தித்து எனது ஆசிகளையும் வாழ்த்துக் களையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

சர்வேஜன சுகினோ பவந்து

சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள்

(சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி)

## சாரதாசேவாச்சிரம சுவாமிகளின் ஆச்செய்தி



வலம்புரி நாளிதழ் 9வது ஆண்டு நிறைவு விழாவை 20.12.2008 அன்று கொண்டாடப் படவுள்ளதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.
முக்கியமாக சுவாமி விவேகானந்தரின் ஆளுமை பற்றிய கருத்துக்களை தினமும் வலம்பு ரியில் பிரசுரித்துவருவது மிகவும் சிறப்பான அம்சம்.
சுவாமி விவேகானந்தர் 1897 ஆம்ஆண்டு ஜனவரி மாதம் ஐந்தரை நாட்கள் நித்திரையின்றி ஒரு வண்டியில் (coach) யாழ்ப்பாணம் வந்ததாக சரித்திரம் சான்றுபகர்கிறது. சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்தில் 100 நிமிடங்கள் ஆற்றிய உரையையும் பலர் இன்று மறந்துவிட்டனர். சுவாமியைப் போற்றுவதால் நமக்கு விடிவு ஏற்படும் என்று உறுதியாக நம்புகிறோம். வலம்புரி நாளிதழ் இப்பணியில் ஈடுபடுவது மிகவும் பெருமைக்குரியது.
எங்கள் நல்வாழ்த்துக்களுடன் இறைபணியில்,

சுவாமி சித்ருபானந்தா


(ஸ்ரீ இராமகிருஷ்ணா சாரதா சேவாச்சிரமம்-பருத்தித்துறை)

## நன்நெறி காத்திடு...

வெள்ளியிலே தரிசனம் தந்தாய்
அரசியல் தொடர் தந்தாய்
அழிவுகளின் ஆவணம் தந்தாய்
கல்விப் பகுதி தந்தாய்
கல்விக்காய் பல தொடரும் தந்தாய்
நிகழ்வுகளை படமாய் தந்தாய்
அறிவுக்கலசம் தந்தாய்
இன்று ஒரு தகவல் தந்தாய்
புயலுக்கு ஓர் தொடர் தந்தாய்
ஆன்மீகம் தந்தாய்
சினிமாவும் விளையாட்டு செய்தியும் தந்தாய்
எமக்காய் நீ இன்னும் தரவேண்டும்
சிறுவர் பக்கம்
இலக்கியம் –கவிதை –சிறுகதை என
சங்குகள் பல கண்டு உன்
ஒலிகள் உலகெல்லாம் அதிரட்டும்
அகவை ஒன்பது காணும் வலம்புரிக்கு
என் வாழ்த்துக்கள் –வலம்புரியே நீ என்றும்
நடுநிலை தவறா நன்நெறி காத்திடுவாய்

- ஆழ்வார். -

## யாழ். குடாநாட்டு மக்



ஊடகங்களின் குரல் எ
என்பர். அவ்வகையில்
மக்களின் குரலாக வெ
நாளேட்டின் 9ஆவது அ
கைச் சமூகத்தை வாழ்
அடைகிறேன்.
யாழ். குடாநாட்டு மக்க
வெளிக்கொணர்வதிலும் வெளி உலகோடு
மக்களுக்கு வெளி உலகச் செய்திகளைக்
பத்திரிகை எம் யாழ். குடாமக்களுக்கு கடந்
புரிந்துள்ளது.
10ஆவது ஆண்டில் கால்பதிக்கும் இந்த
இக்காலகட்டத்தில் உண்மைக்கும் நீதிக்
அர்ப்பணிப்புடன் செயற்படும் வலம்புரிக்கு
களையும் ஆசிகளையும் வழங்கி நிற்கின்

மேதகு

## வலம்புரியின் போற்றுதல



இந்நாளில் தன்னு
வருட நிறைவைக்
நாளிதழின் மகிழ்வி
யாழ்ப்பாண அத்திட்சாதி
எந்தவொரு
வாழ்வியலோடு இர
வாழ்வின் அனுபவங்க
இருப்பினும் அல்லது துன்பங்கள் மற்றும்
காணப்படினும் கூட பகிரப்படல் அவசியம்.
குறிப்பாக இன்றைய சூழமைவில் நாளி
நாட்டினது, உலகத்தினது நடப்புக்களை வெ
தன்னை எவ்விதம் அந்த செய்திகளுக்கூட
வேண்டும் என உணர்த்துகின்றன.
இந்தவகையில் லலம்புரி இந்த
மக்களுக்கு ஆற்றிய சேளவை போற்
இருப்பியல் பிரச்சினைகளை (Existential
அவர்களது அடையாளத்தன்மையை (Is
படுத்தியும் தன்னுடைய ஆக்கங்களையு
கொண்ட வலம்புரி மென் லும்
இறைவனது அருள் கூட இருப்பதாக என

அதிவண கலா

(பேராய

## மகோன்னத வ அறிவியலைத் தரு



ஒன்பது வருட
பத்திரிகை ஆரம்பி
எதிர்காலம் எப்படி அ
பலர். ஆனால், கடந்த
தொடர்ந்து வெளி
மகோன்னத வளர்ச்சி
பத்திரிகைகளே சாதா
கழகங்கள். அவர்க
படிப்பதில்லை. வலம்புரி இந்த உ
ள்ளது. வாசிக்கும் பழக்கம் அருகிவரும் இ
இலக்கியம், வரலாறு, அரசியல் எனப் பல
அறிவை வளர்த்து வருகின்றது. செய்திகள்
எடுத்துக்கூறுகின்றது.
பத்தாவது ஆண்டில் காலடி எடு
அதன் ஆசிரியர் குழுவிற்கும் மற்றும் பண
நல்லருள் கிட்டுவதாக.

பேராயர் க

(முன்னாள் அத்தியட்சச
மற்றும் அ

## வந்தனை செய்தோம்...



நலம் பலபெற்று இந்நாளில் போற்றிட
வலம்வரும் எங்கள் நல் வலம்புரி நாளிதழே!
பலம் மிகப் பெற்றே நீ பாரினில் உயர்ந்திட
நிலந்தனில் நீ என்றும் நீடுழி வாழியவே!!

சிந்தனைக்குரிய நல்ல சிறந்த பல கட்டுரைகள்
எந்தனை மகிழ்விக்கும் ஏற்றமிகு தகவல்கள்
உந்தனில் வந்திட எம்முள்ளமே குளிர்ந்திட
வந்தனை செய்தோம் நீ வளமுடனே வாழியவே

சிவநெறிக்கலாநி
- இராசையா ஸ்ரீதரன்

# நிறைவு சிறப்பு மலர் -20.12.2008

## ட்டு மக்களின் குரல்

ளின் குரல் எப்போதும் தேசத்தின் குரல்
அவ்வகையில் யாழ். குடாநாட்டில் வாழும்
குரலாக வெளிவரும் வலம்புரி செய்தி
ன் 9ஆவது ஆண்டு நிறைவில் இப்பத்திரி
கத்தை வாழ்த்தி ஆசி கூறுவதில் மகிழ்ச்சி
றன்.
டாநாட்டு மக்களின் அவல நிலைகளை
ளி உலகோடு தொடர்பு குறைந்துள்ள எம்
செய்திகளைக் காவி வருவதிலும் வலம்புரிப்
களுக்கு கடந்த 9 வருடங்களாகத் துணை

க்கும் இந்த வேளையில் சவால்கள் மிக்க
மைக்கும் நீதிக்கும் முக்கியம் கொடுத்து
ம் வலம்புரிக்கு என் மகிழ்வான வாழ்த்துக்
ழங்கி நிற்கின்றேன்.

அதிவணக்கத்துக்குரிய
மேதகு தோமஸ் சௌவுந்தரநாயகம்
யாழ். ஆயர்

## ம்புரியின் சேவை
## றுதலுக்குரியது

ல் தன்னுடைய தொடக்கத்தின் 9ஆவது
நிறைவைக் கொண்டாடும் வலம்புரி
ன் மகிழ்விலே தென் இந்திய திருச்சபை
ண அத்திட்சாதீனமும் பங்குகொள்ளுகிறது.
எந்தவொரு நாளிதளும் ஒரு சமுகத்தின்
லோடு இரண்டறக் கலந்தது. மானுட
அனுபவங்கள். அவை இன்பமானதாக
ங்கள் மற்றும் வேதனைகள் நிறைந்ததாகக்
ல் அவசியம்.
மயில் நாளிதழ்கள் ஒரு சமுகத்தினது.
புக்களை வெளிக்கொணர்ந்து ஒரு சமுகம்
ய்திகளுக்கூடாகத் தயார்ப்படுத்திக்கொள்ள
ன்றன.
ம்புரி இந்த ஒன்பது வருடங்களுக்கூடாக
வை போற்றுதலுக்குரியதே. மக்களது
(Existential Problems) எடுத்துக்கூறியும்
ன்மையை (Issue of Idnetity) உறுதிப்
க்கங்களையும் செய்திகளையும் பகிர்ந்து
லும் பணிபுரிய எல்லாம் வல்ல
தாக என் வாழ்த்துகிறேன்.

வண கலாநிதி டீ.எஸ். தியாகராஜா
(பேராயர்-தென் இந்திய திருச்சபை)

## னத வளர்ச்சியுடன்
## த் தரும் வலம்புரி

ஒன்பது வருடங்களுக்கு முன்னர் வலம்புரி
க ஆரம்பிக்கப்பட்டபொழுது அதன்
ம் எப்படி அமையுமோ என்று ஏங்கியவர்கள்
னால், கடந்த ஒன்பது வருடங்களாக அது
து வெளிவந்ததோடு அமையாது
னத வளர்ச்சியும் பெற்றுள்ளது.
ககளே சாதாரண மக்களின் பல்கலைக்
ள். அவர்கள் அதற்குமேல் எதுவுமே
இந்த உண்மையை நன்கு உணர்ந்து
அருகிவரும் இக்காலகட்டத்தில். ஆன்மீகம்,
பல் எனப் பலதுறைகளில் யாழ். மக்களின்
து. செய்திகள் விரைவாகவும் தெளிவாகவும்

ல் காலடி எடுத்துவைக்கும் வலம்புரிக்கும்
மற்றும் பணியாளர்களுக்கும் இறைவன்

பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்
அத்தியட்சகர்-தென்னிந்திய திருச்சபை
மற்றும் அமெரிக்க இலங்கை மிஷன்)

## தர்மத்தின் வழி வழுவாது நின்று பணி செய்யும் வலம்புரி



வாள்முனையின் கூரியதெனக் கூறப்படும் பேனா முனையின் துணையுடன் பத்திரிகைத்துறையில் தர்மத்தின் வழுவாது நின்று 9ஆண்டுகள் பூர்த்தி செய்யும் வலம்புரியின் பணி மகத்தானதாகும். மிகவும் இக்கட்டான இக்காலகட்டத்தில் மிகுந்த பின்னடைவுகளைச் சந்தித்துக்கொண்டிருக்கும் எம்மக்கள் மத்தியில் எளிதில் சென்றடையக்கூடிய முதன்மை ஊடகமாக விளங்குவது பத்திரிகையே. உலகையே ஒரு வீட்டிற்குள் கொண்டுவருமளவிற்கு வியத்தகு வளர்ச்சி கண்டுள்ள தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் எமது சமூகத்திற்கு சர்வதேசத்தையே அறிமுகம் செய்யும் பெருந்திறனைப் பத்திரிகைத்துறையே கொண்டுள்ளது.

காலத்தின் தேவைக்கேற்ப சமூகத்தின் தேவைகளை நெறிப்படுத்தி பல்வேறு துறைகளிலும் பயனுள்ள தகவல்களைத் தொகுத்தளிக்கும் திறனினாலேயே மக்கள் மத்தியில் பத்திரிகைகள் நிலைபெறுகின்றன.

***விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்*** என்று சொல்வன்மையில் நிறம் செப்பினான் வள்ளுவன். மக்கள் மத்தியில் கருத்துக்களை வழங்கி அதன்வழி கருத்துக்களை உருவாக்கி அக் கருத்துக்களையே மக்கள் கருத்துக்களாக வெளிப்படுத்தும் மகத்தான சக்திகொண்ட பத்திரிகையானது நடுநிலை நின்று நல்லதையே சொல்லவேண்டும். இந்த வகையில் பல்வழியிலும் சமூகத்தை நல்வழிப்படுத்தும் திறன்வாய்ந்த பத்திரிகைத்துறையில் ஒன்பதாவது அகவையில் காலடி எடுத்துவைக்கும் வலம்புரியின் சங்குநாதம் எம்மண்ணில் பல்லாண்டு ஒலிக்க வேண்டுமென இவ்வினிய நன்நாளில் வலம்புரியையும் அது சார்ந்த அனைவரையும் மனமுவர்ந்து வாழ்த்துகின்றேன்.

க. கணேஷ்
*(அரசாங்க அதிபர் /மாவட்டச் செயலர் யாழ். மாவட்டம்.)*

## எதிர் நீச்சல்போட்டு வளர்ச்சிபெற்ற வலம்புரி



வலம்புரி பத்திரிகை தனது 09ஆவது வெளியீட்டு ஆண்டை நிறைவு செய்து, 10ஆவது ஆண்டில் காலடி வைப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த 9 ஆண்டுகளில் இப்பத்திரிகை பல்வேறு நெருக்கடிகள், நெருக்குவாரங்களுக்கு முகம் கொடுத்த போதும் வீழ்ந்துவிடாது, எதிர்நீச்சல் போட்டு, இன்று வளர்ச்சிபெற்ற நாளிதழாக வெளிவருவது பாராட்டுக்குரியது.

வலம்புரி ஒரு பிரதேசப் பத்திரிகையாக இருந்தபொழுதும் அரசியல், பொருளாதாரம், பிரதேச அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், கலை, இலக்கியம், சமயம், விளையாட்டு, சர்வதேச விவகாரம் போன்ற விடயங்களில் பலதரப்பட்ட செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டு வருகின்றது.

மேலும் சமுக நலன்கருதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து அவற்றின் தீர்வுக்கான அவசியத்தையும் அவசரத்தையும் வலியுறுத்துகின்றது. பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் வலுச்சேர்க்கின்றது.

வறுமைத்தணிப்பு, கல்வி, சுகாதார மேம்பாடு, பெண்வலுவூட்டல், இளைஞர் மேம்பாடு மற்றும் வாழ்வாதார செயற்பாடுகள் பற்றியும் நல்லாட்சி, நெறிமுறைகள், நற்பிரஜைகள், நன்னெறிகள் சிவில், சமுகங்களின் கடமைகளும் செயற்பாடுகள் பற்றிய கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புரை செய்வதில் வலம்புரி சிறப்பாக பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

சிறந்த பணியாற்றும் வலம்புரிக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை
*(முன்னாள் துணைவேந்தர்-யாழ். பல்கலைக்கழகம், இயக்குநர்-ஊடக வளங்கள் பயிற்சி நிலையம்-யாழ். பல்கலைக்கழகம்)*

## சமூக மனங்களை வென்ற நாளிதழ்



எங்களது பொழுதுகள் பிராந்திய நாளிதழ்களுடனேயே விடிகின்றன.

எங்களது அறிவு- மனவெழுச்சி-அழகியல் - அரசியல் என விரியும் அனைத்துத் தளங்களிலும் இந்நாளிதழ்கள் விதைக்கின்ற பண்பாட்டின் தாக்கங்கள்.

இந்தவகையில் ஒரு தசாப்த காலத்துள் சமூக மனங்களை வென்று நிலைபெற்றுள்ள வலம்புரி-நாளிதழின் 9ஆம் ஆண்டு நிறைவினை வாழ்த்தும் இந்த வேளை பெறுமதியானது.

அறிவுத்துணிபும் சமூக உணர்வும் வலம்புரியின் நிலைபேற்றுக்கான அடிப்படைகளெனலாம். கூரிய தெளிந்த நல்லறிவின் பிரதிபலிப்புகளாய் அமைகின்ற செய்திகள் - செய்திக்கட்டுரைகள்- எளிமையான தொடர்பியல் மொழியில் அமைகின்ற ஆசிரிய தலையங்கங்கள், அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளுக்கு அப்பால் சமுதாயத்து அறிவை -மனதை மேம்படுத்துதற்கான அறிவுத்திறங்களை தேடி நிதம் தரும் பாங்கு என வலம்புரியின் வல்லமை பற்றிய மதிப்பீடுகள் மகிழ்ச்சி தருகின்றன.

நீதியான-சமத்துவமான-அழகான நாளையைப் படைக்கும் பெரும் பணியில் எங்கள் சமூகத்துக்கான வல்லமைகளை மென்மேலும் வளர்த்திடும் வண்ணம் வலம்புரியின் ஆற்றல்கள் நிறைந்திடவும், நின்று பயன்தரவும் எல்லையில்லா என் அன்பு ஆசிகள்.

பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்
*(துணைவேந்தர்-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)*

## கல்விப் பணியில் முன்னின்று உழைக்கும் நாளிதழ்

வலம்புரி நாளிதழ் இன்று தனது 9ஆவது அகவையை கொண்டாடும் செய்தி அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மக்கள் சமூகத்திற்கு அறிவியல் சார்ந்த விடயங்களை வழங்குவதில் வலம்புரியின் பாதை தனித்துவமானது.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுடன் இணைந்து பரீட்சை மாதிரி வினாத்தாள்களை பிரசுரித்து மாணவர்களுக்கு உதவிபுரிந்த வலம்புரியின் கல்விப்பணி பாராட்டுதற்குரியது.

கல்விசார் செய்திக்கு வலம்புரி என்ற தனித்துவமான பெருமையை கொண்டுள்ள இந்நாளிதழின் சமூக முன்னேற்றத்திற்கான பணியை அறிவியல் உலகம் நிச்சயம் பாராட்டும்.

வலம்புரியின் பணி தொடர எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றி.

இ.இளங்கோவன்
*(கல்விப்பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு, மாகாணம் திருகோணமலை)*

## மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்த பக்கச்சார்பற்ற நாளிதழ்



வலம்புரி நாளிதழ் தனது 09ஆவது ஆண்டினை நிறைவு செய்திருப்பதைக் கொண்டாடப்படும் ஆண்டு நிறைவு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த 09 ஆண்டுகளைப் பின்னோக்கிப் பார்க்கின்ற போது நாட்டின் அமைதியற்ற நிலை, போராட்ட சூழல், இடப்பெயர்வு, உணவுப் பஞ்சம், இயற்கை அனர்த்தம் போன்றவற்றிற்கு மத்தியிலும் மிகுந்த பிரயத்தனத்துடன் எதிர்நீச்சல் போட்டு 09 வயதினைப பூர்த்தி செய்திருக்கும் வலம்புரியைப் பாராட்டி வாழ்த்தாதிருக்கமுடியாது.

நடுநிலை தவறாமை, பக்கச் சார்பின்மை, உண்மைகளை உறுதிப்படுத்தல் போன்ற பத்திரிகா தர்மத்தைப் போற்றிவரும் வலம்புரி மக்கள் மனதில் நீங்கா இடத்தினைப்பெற்றுள்ளது. அந்நாளிதழ் மென்மேலும் வளர்ந்தோங்க வேண்டுமென எனது சார்பிலும் யாழ்நகர மக்கள் சார்பிலும் உளமார வாழ்த்துகின்றேன்.

மு.செ.சரவணபவ
*(மாநகர ஆணையாளர்-யாழ்ப்பாணம்)*


கட்டுரைகள்
தகவல்கள்
ரிந்திட
வாழியவே!
நறிக்கலாநிதி
பா ஸ்ரீதரன் -

## தனித்துவ இதழாய்...

தகவல்கள் பலவும் தரமுடன் தந்தெம்
நெஞ்சினில் நிறைவுடன் விளங்கும் இதழே!
தகவல்கள் யாவும் நடுவு நிலைமையாம்
தர்ம வழியினில் தரும்நல் இதழே!

தகவல்கள் எல்லாம் தெள்ளிய தமிழில்
தேர்ந்து அளித்திடும் மக்கள் இதழே
தகவல்கள் வழங்கிடும் திறன்மிகு பணியில்
தனித்துவ இதழாய் வாழ்க நீ பல்லாண்டே!

- நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன் -



# 9வது ஆண்டு நிறைவில் வலம்புரியை வாழ்த்துவோர்


9ஆவது ஆண்டை பூர்த்தி செய்யும் வலம்புரிக்கு வாழ்த்துக்கள்

பல சரக்குப் பொருட்கள், பால் மா வகைகள் மற்றும் பிஸ்கட் வகைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

**ஸ்ரீ முருகன் களஞ்சியம்**

மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. தொ.பே. 021 222 5459

காலத்தின் தேவை அறிந்து ஒளிர்கின்ற வலம்புரியே ! நீடூழி வாழ்க!

- கிராமிய வங்கி
- விவசாய சேவை
- சுயதொழில் கடன்
- மீள் புனரமைப்பு சேவை
- இரும்பு விற்பனை நிலையம்
- கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி
- நுகர்ச்சி சேவை
- நிழற்பிரதி சேவை
- சிற்றுண்டிச் சாலை
- கட்டட ஒப்பந்தவேலை
- தொலைத் தொடர்பு சேவை
- புடவை விற்பனை நிலையம்

**தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

துர்க்காபுரம் –தெல்லிப்பளை
T.P :222 3053, 222 3054

யாழ் நகரில் 1987 முதல் நிகரற்ற சேவையை வழங்கி வரும் ஒரேயொரு அழகு ஸ்தாபனம்

**YOGI'S**

75 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2796, 077 164923,060 2210077,

வையகம் எங்கும் வலம்புரி வலம் வர வாழ்த்துகின்றோம்.

**துர்க்கா பொத்தக சோலை**

இரண்டு தசாப்தங்களாக மாணவர்களுக்கு ஒளியூட்டி வழிகாட்டும் ஸ்தாபனம்
துர்க்கா பொத்தக சோலை
பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்

உலகிற்கு ஒளியாய் திகழ வலம்புரிக்கு எம் வாழ்த்துக்கள்

அழகிய ஆபரணங்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

**ஸ்ரீ மீனாட்சி தங்க மாளிகை**

187 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இன்று 10 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் எமது அபிமான தினமலரான வலம்புரியை





மலரும் புத்தாண்டிலும்
எப்போதும் போல் மணம் பரப்பி
யாவரினதும் உள்ளங்களிலும்
நிறைந்து வாழ வாழ்த்துகின்றோம்.

**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் -வ.து**

**நத்தார் பண்டிகை வாடிக்கையாளர்களுக்கு விசேட நற்செய்தி**



எமது சங்கத்தின் கூட்டுறவு நகர் 01, 02
விசேட கிளை நிலையங்கள் மூலம் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட விலைச்சலுகை பற்றிய அறிவித்தலுக்கு மேலாக

1.5 லீற்றர் சோடா ஒன்றும்
330 மி.லீற்றர் சிறிய சோடா ஒன்றும் சேர்த்து கொள்வனவு செய்கின்ற ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் அவற்றின் முகப்பு பெறுமதியிலிருந்து ரூபா. 15/= விலைக்கழிவு வழங்கப்படும்.

*இன்று தொடக்கம் ....*

1.5 லீற்றர் சோடா ஒன்றினதும் - 330 மி. லீற்றர் சிறிய சோடா ஒன்றினதும் விற்கும் விலை ரூபா. 190/= இலிருந்து 175/= ஆக விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது.



*இதற்கு மேலாக*

மேற்படி 5 சோடி சோடாக்களை மொத்தமாக கொள்வனவு செய்கின்ற ஒவ்வொரு வாடிக்கை யாளர்களுக்கும்
மேலே அறிவிக்கப்பட்ட விலைத் தள்ளுபடிகள் வழங்கப்படுவதுடன் 330மி.லீற்றர் சோடா இரண்டு இலவசமாக வழங்கப்படும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி தனியான 1.5 லீற்றர் சோடா 05 கொள்வனவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் 1.5 லீற்றர் சோடா ஒன்று இலவசமாக வழங்கும் திட்டமும் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

# 9வது ஆண்டு நிறைவில் வலம்புரியை வாழ்த்துவோர்


தடைகள் பல தாண்டிவரும் வலம்புரியே உன் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.
குறித்த நேரத்தில் குறித்த தவணையில் தரம் குன்றாத 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**கிருஷ்ணா நகை மாளிகை**

இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம்

கிருஷ்ணா அடகுக் கடை
இல.370, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அஞ்சாமல் நியாயத்தை தட்டிக்கேட்டு அரவணைத்து புத்தி சொல்லும் வலம்புரியை வாழ்த்துகிறோம்
தங்க நகைகளை மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள

**அசோகா நகை அகம்**

ASOKA JEWELLERS

இல:-111 , கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆங்கில மருந்து வகைகள் , ஊட்டச்சத்து, பால்மா வகைகள் என்பவற்றை மலிவாக நியாய விலையில் பெற்றுக்கொள்ள

**R.V.G மெடிக்கல்ஸ்**

ஆர் வி. ஜி ஸ்தாபனம்

இல.58 நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2129
இல 504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(O.P.D முன்பாக)

**வேல் முருகன் வாணிப நிலையம்**

**Velmurugan Traders**

தற்காலிக நவநாகரீக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான வர்ண பெயின்ட் வகைகளும் , சுண்ணாம்பு, கட்டடப் பொருட்கள் விற்பனையாளர்

56 A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். T.P:-021 222 9437

- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து நவீன ரகக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்.
- உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளவும்.
- வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன முறையிலான கேஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ், போட்டோ கிறேலென்ஸ் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளவும் நாடுங்கள்.

(கட்டுப் பற்களைச் சுத்தம் செய்யும் மாத்திரை விற்பனைக்குண்டு)

**எரிக் கணேஷ்**

மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்
566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை இல
91 கே.கே.எஸ். வீதி

கிளை இல
80 கே.கே.எஸ்.வீதி
சுன்னாகம்.

வலம்புரியின் சேவை மென்மேலும் வளர எமது நல்வாழ்த்துக்கள்

**தமிழ்ப்பூங்கா அச்சகம்**

தொ.பே.021 226 4014
பிரதான வீதி,
நெல்லியடி.

9ஆவது ஆண்டை பூர்த்தி செய்யும் வலம்புரியே நீ பல்லாண்டு காலம் வாழ்க.

**லைடன் புடைவை நிலையம்**

410 ஆஸ்பத்திரி வீதி
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2381

தடைகள் பல தாண்டி வலம் வரும் வலம்புரியே உன் பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

**ஜீவாகாரம்**

**JEEVAKARAM**

இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஒரு உப உணவாகும்.

- வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும்
- கர்ப்பிணித் தாய்மார்களுக்கும்
- பாலூட்டும் தாய்மார்களுக்கும்
- போசாக்குக்குறைவான குழந்தைகளுக்கும்

இல்லத்தரசிகளே அண்ணா கோப்பி தயாரிப்புக்களை வாங்கிப்பாவித்து இன்புறுங்கள்!

**அண்ணா தொழிற்சாலை**

இணுவில்

10ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் வலம்புரியே நீ பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துக்கள்

**லாவண்யா பல் மூக்கு கண்ணாடியகம்**

மிதப்புப்பற்களுக்கு நிரந்தர கிளிப் செய்து கொடுக்கப்படும்

552, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை முன்பாக)

கிளை: பருத்தித்துறை வீதி
நெல்லியடி (பொலிஸ் நிலையம் முன்பாக)

9ஆவது ஆண்டை நிறைவு செய்யும் வலம்புரியே நின் சேவை பாரெல்லாம் பரவ பலகோடி வாழ்த்துக்கள்

- உங்களுக்கு வேண்டிய அழகிய அசல் தங்க நகைகளை விருப்பத்திற்கு ஏற்ற டிசைன்களில் வடிவமைத்துத் தருபவர்கள்
- ஓடர் நகைகள் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

**துர்க்கா நகைப்பூங்கா**

71, கன்னாதிட்டி , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

3-I

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



பசுமையில் புதுமை செய்யத்துடிக்கும் என் இனிய உறவுகளுக்கு! புதிதாக கட்டியெழுப்ப விருக்கின்ற பசுமைப் புரட்சின் சில்லுகளை அசைத்து வடமிழுத்து வர வாய்ப்பு வந்திருக்கிறது. திட்டமிட்டதும் இயற்கையோடிணைந்ததுமான விவசாயத்தை மேம்படுத்துவதை நோக்காக வைத்து பசுமைப் புரட்சியின் சில்லுகளை திசை திருப்பி விட வேண்டும்.

**விதைத்தது விதையாக இருக்க வேண்டும்**

நல்ல விவசாயத்திற்கு அடிப்படை என்றுமே நல்ல விதைகள் தான். நல்ல விதை கொண்டு நாலு பயிர் செய்தால் நாலுகாசு சம்பாதிக்கலாம் என்றார் நம்மாழ்வார்.

திருந்திய இனங்கள் என்றார், விதைத்ததில் முளைவிட்டதை விரல் விட்டு எண்ணலாம். ஏன் இப்படி என்றால் விதைத்த விதையின் முளைதிறன் குறைவு என்பார். அங்கே தேடி, இங்கே தேடி, அலைந்து விலை அதிகம் கொடுத்து விதைத்தேனே! விதைத்தது முளைக்கவில்லையே என இவர் கவலை கொள்வார்.

இம் முறை காலபோகத்தின் கதை மாறி விட்டது. விதைத்த நெல் மணிகளெல்லாம் முளைத்து மூன்று அங்குலப் பயிராகி விட்டது. ஆனால் மழை மருந்துக்கும் இல்லை. வளர்ந்த பயிர்களெல்லாம் காய்ந்து கருகிக் கொண்டிருக்கின்றன. மழை பிழைத்தால் மீண்டும் உழுது விதைக்க வேண்டும். இரட்டித்த செலவு. இறைக்கும் இயந்திரம் பூட்டி நெல்வயலுக்கு நீர் பாய்ச்ச முனைந்திருக்கின்றது உலகம். முடிந்த காரியமா இது.

*வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயர்வான்.* கேட்க எவ்வளவு நன்றாக இருந்தாலும் நீர் எப்போது உயர்வது. போகத் தின் ஆரம்பமே சறுக்கலாகி இருக்கிறதே - அங்கலாய்த்தார் முத்தர். காலங்காலமாக நெல் வேளாண்மை செய்து வரும் அவருக்கு இம்முறை விசித்திரமாக இருக்கிறது. அது ஒன்றுமில்லை, காலம் பிழைத்துவிட்டது என்றார். காலங்காலமாக ஒரேமாதிரி இருந்த காலநிலையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியிருக்கின்றது. காலம் தப்பித்துவிட்டதென்றார் முத்தர்.




காலம் பிழைக்காதிருந்த போது செய்த பசுமைப் புரட்சியினால் தெரிந்தெடுத்த தானியங்களின் உற்பத்தி பெருகியிருந்தது. அதனால் உணவுற்பத்தியிலேயே மக்கள் அதிகளவில் கரிசனை செலுத்தினார்கள்.

பஞ்சத்தையும் பட்டினிச் சாவையும் ஓரளவிற்கேனும் விரட்ட முடிந்தது. ஆனால் காலநிலை மாற்றமடையும் போது என்ன செய்வது? எங்களூர் விவசாயியின் அங்கலாய்ப்பும் கேள்வியும் இதுதானே. இந்த விசித்திரத்தில் இனியொரு பசுமைப் புரட்சியா?

ஏன் முடியாது? விவசாயம் கற்கும் சின்னராசுவின் பொடியன் சரியாகத் தான் சொன்னான். எல்லாம் எங்கள் கையிலே தான் இருக்கிறது. அந்தக் காலத்தில் நிலம் பார்த்த விவசாயம் செய்தால் வானம் நிலத்தைப் பார்க்கும். மழை பொழியும். பொய்க்காது.

நாடாளும் அரசரும் விடுப்புக்காய் கேட்டு வைப்பார். என்ன அமைச்சரே! மாதம் மும்மாரி பொழிகிறதா? ஆனால் இப்போது அந்த அமைச்சர் இருந்திருந்தால் அவருக்கு தர்ம சங்கட நிலை தான் ஏற்பட்டிருக்கும். எங்கே பெய்கிறது மும்மாரி. விஞ்ஞானம் எங்கெல்லாம் எப்படியெல்லாம் வளர்ந்துகொண்டு போனாலும் கால நிலையை துல்லியமாக கணக்கிட முடியவில்லையே. இயலாமையென்றவுடன் எல்லாம் இயற்கையின் விளையாட்டு என்று விடுகிறோம்.

நிலத்தை உழுது பண்படுத்தி பலத்த எதிர்பார்ப்புக்களுடன் விதைக்கும் விதையிலும் அது வளரும் நிலத்திலும், நீரிலும் எங்களூர் விவசாயம் இப்போது நம்பியிருக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக வானத்தின் ஆதரவு இன்றி வளமான விவசாயமில்லை என்றாகி விட்டது.

*இனியொரு பசுமைப் புரட்சியிலே* புதியதென்று எதுவும் பெரிதாய் செய்யாவிட்டாலும் முன்னையதில் விட்ட தவறுகளை இனிவரு வதில் திருத்திக்கொள்ள வேண்டும். பசுமையில் புதுமை செய்தல் வேண்டும். அதில் இயற்கையும் ஒன்றிணைந்திட வேண்டும்.

அபரிவிதமான விஞ்ஞானத்தின் வளர்ச்சியிலே காலநிலை மாற்றத்தை துல்லியமாக எதிர்வு கூறும் தொழில்நுட்பம் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். சூரியனுக்குத் தூது விடும் விஞ்ஞானத்திற்கு இதன் சூட்சுமம் புரியும்.

பிந்திப் பெய்கின்ற மழை, பெய்ததும் நனைத்து விட்டுப் போவது போல் அங்கொன்றும் இங்கொன்றுமாய் துளிகளுடன் சரி. முளைத்த பயிருக்கு தேவையான நீரை உள்ளிழுத்து வெளிவிட முடியாதிருக்கின்றதாம். உப்புக்கரிக்கின்றதாம்.

அப்போது இப்படியில்லையே! நல்ல மண், நல்ல நீர், நல்ல விதை, கிடைத்தவை அனைத்தும் சுத்தமானவை. ஆனால், இப்போது விதைக்க நல்ல விதை தேட வேண்டும். அதுக்கு நல்ல உழவு வேண்டும், உழுத வயலுக்கு நல்ல உரமும் வேண்டும். பூச்சி, நோய் வந்தால் அடிக்க மருந்தும் வேண்டும். விளைந்ததை விற்க சந்தையும் வேண்டும்.

**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

கமஞ்செய்தலென்பது இவையனைத்திலுமே தங்கியிருக்க வேண்டியதாயிற்று. கமமும் கமக்காரனின்றி தவிக்கும் நிலையும் வந்துகொண்டிருக்கிறது. இனியொரு பசுமைப்புரட்சியிலே கலப்பில்லாத தூய விதைகளை தாராளமாக உற்பத்தி செய்ய வழிபிறக்க வேண்டும். தூய விதைகள் என்னும்போது வேறுவிதைகள், களைகளின் விதைகள், கலப்பு இன விதைகள் அற்ற நோயற்ற முளைதிறன் அதிகமாகவுள்ள சிறந்த விதைகளாகும். கமக்காரர்களிடை யேயுள்ள கூட்டமைப்பை ஸ்திரப்படுத்தி நிலை யான கட்டமைப்பை உருவாக்கி சிறந்த விதைகளை உற்பத்தி செய்வதை தொடர்ச்சியாக கண்காணிக்க வேண்டும். (தொடரும்)

# கொல்லைப்புற கோழி வளர்ப்பு முறைகள்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**கனியுப்புக்கள் அல்லது தாதுப் பொருட்கள்**

கோழிகளின் சீரான வளர்ச்சி, கோழிகளின் முட்டையிடும் திறன் என்பவற்றிற்கு ஆதாரமாக தாதுப்பொருட்கள் காணப்படுகின்றன. கோழித்தீவனத்தை தேர்ந்தெடுக்கும் போது தேவையான அளவு கல்சியம், பொசுபரசு, சோடியம், குளோரின், அயடின், மங்கனிசு, நாகம் ஆகிய தாதுப்பொருட்கள் சரியான அளவு கலந்திருக்கின்றனவா என்பது முக்கியமானதாகும்.

அத்தோடு நுண்தாதுப்பொருட்கள் தேவையான அளவு கொடுக்கப்பட வேண்டும். இவை பலவிதமான உடற் கோளாறுகளை நிவர்த்தி செய்கின்றன.

**நீர்**

நீரானது உடற்தொழிற்பாட்டுக்கு மிகவும் இன்றியமையாதது ஆகும். இது உணவுத் துணிக்கைகளை உள்ளெடுப்பதற்கும், உணவின் சத்துக்களை அகத்துறிஞ்சுவதற்கும், உணவுத் துணிக்கைகளைக் கொண்டு செல்வதற்கும், உணவு சமிபாடடைவதற்கும், ஓமோன்கள் மற்றும் கனியுப்புகளைக் கடத்துவதற்கும், உடலிலிருந்து கழிவுகளைக் கடத்துவதற்கும், உடலிலிருந்து கழிவுகளை வெளியேற்றவதற்கும், உடலின் வெப்ப நிலையைச் சீராக்குவதற்கும் உதவுகின்றது.

நீர்ப்பற்றாக்குறையினால் சமிபாடு மற்றும் கழிவு வெளியேற்றம் என்பன பாதிப்படைந்து இறுதியில் இறப்புக் கூட ஏற்பட வழிவகுக்கின்றது.

பொதுவாக நூறு கோழிகள் வளர்க்கின்றோம் என்றால் சராசரியாக நாள்தோறும் 30-35 லீற்றர் (300மில்லி லீற்றர்/ ஒரு கோழி) நீர் தேவைப்படுகின்றது.

தூய்மையான நீரானது தொடர்ச்சியாக கிடைக்குமாறு நீர் கொள்கலங்களில் போதுமான அளவுகாணப்பட வேண்டும். வெப்ப காலங்களில் நீரின் நுகர்வு கூடுதலாகக் காணப்படுகின்றது. அதற்கேற்ற வகையில் நீரானது வழங்கப்படவேண்டும்.

**சரியான உணவுத் தெரிவு**

வயதிற்கு ஏற்ற வகையிலும் என்ன நோக்கத்திற்காக வளர்க்கப்படுகின்றது என்பதைப் பொறுத்தும் கோழிகளுக்கான உணவு வகைகள் வழங்கப்படுகின்றன. இவற்றைச் சரியான அளவிலும், சரியான முறையிலும் கோழிகளுக்கு இடுவதன் மூலம் சரியான நேரத்தில், அதிகளவிலான உற்பத்தியைப் பெறமுடியும்.

பொதுவாக முட்டைக்கோழி மற்றும் இறைச்சிக் கோழிக்கு தேவையான முக்கியமான சத்துக்களின் அளவை கீழ்வரும் அட்டவணைகள் தருகின்றன.

**முட்டைக் கோழித்தீனில் இருக்க வேண்டிய முக்கியமான சத்துக்களின் அளவு**

| | குஞ்சுப்பருவம் | வளர்பருவம் | முட்டையிடும்பருவம் |
|---|---|---|---|
| எரிசக்தி (Energy)kcal/kg | 2900 | 2900 | 2850 |
| புரதம் (Curde Protein)% | 18% | 13% | 15% |
| கல்சியம் % | 0.90 | 0.60 | 3.25 |
| பொசுபரசு % | 0.70 | 0.40 | 0.50 |

**இறைச்சிக் கோழித்தீனில் இருக்க வேண்டிய முக்கியமான சத்துக்களின் அளவு**

| | குஞ்சுப்பருவம் | முதிர்பருவம் |
|---|---|---|
| எரிசக்தி (Energy)kcal/kg | 3200 | 3200 |
| புரதம் (Curde Protein)% | 24% | 18% |

கூட்டிற்கு வெளியே சென்றுவரும் கோழிகள் சூழலில் உள்ள பச்சைத் தாவரங்கள் மற்றும் பூச்சி புளுக்களை உணவாக எடுத்துக் கொள்கின்றன. அத்தோடு வீட்டுச் சமையலறைக்கழிவுகளும் உணவாகக் கொள்ளப்படுகின்றன.

இதன்மூலம் உணவுக்கான செலவீனங்கள் குறைக்கப்படுகின்றது. பொதுவாக உள்ளூரில் மலிவாக கிடைக்கக் கூடிய, மனித நுகர்விற்கு மேலதிகமான, பயன்படாத உணவு மூலப்பொருட்களைப் கோழி உணவாக வழங்க முடியும்.

தீனூட்டும் கொள்கலன்களுள் உணவு தொடர்ச்சியாக போதுமானதாக இருக்க வேண்டும்.

ஒரு கோழியின் உணவு உட்கொள்ளும் வீதமானது அதன் முட்டை உற்பத்தி வீதத்துடனும், அதன் பருமனுடனும், உணவிலுள்ள சத்துக்களின் அளவிலும், கோழியின் வயது மற்றும் தொழிற்பாட்டிலும் தங்கியுள்ளது. அத்தோடு சூழல் வெப்பநிலையாலும் பாதிக்கப்படுகின்றது.

**முட்டைக்கோழி வளர்ப்பு**

முட்டைக்கோழியில் முட்யையிடும் செயற்பாடானது 18 தொடக்கம் 20 வார வயதில் ஆரம்பமாகின்றது.

இக்கால கட்டத்தில் அவற்றின் உணவில் உள்ள போசணைச் சத்துக்களின் அளவில் மாற்றம் செய்யப்பட வேண்டிய தேவை ஏற்படு கின்றது. இதனால் இவற்றிற்கு முட்டை உற்பத்திக்கான சத்துக்களையும் கொண்ட முட்டைத்தீவனம் வழங்கப்படுகின்றது.

பொதுவாக தொடர்ச்சியான கோழி இன விருத்திக்கு முட்டைகளைப் பெற வேண்டிய நிலை காணப்பட்டால் 10 கோழிகளுக்கு ஒரு சேவல் என்ற விகிதத்தில் வளர்த்தால் நல்ல வளமான கூடுதலான பொரித்தல் வீதம் உடைய முட்டைகளைப் பெறலாம்.

முட்டைக் கோழிகள் முட்டையிடும் பருவத்தை அடைந்தவுடன் கூட்டின் ஒரு பகுதியில் முட்டைப்பெட்டியை வைக்க வேண்டும். முட்டைப் பெட்டியின் அமைவிடமானது கூட்டின் ஒரு ஒதுக்குப்புறமாகவும் ஓரளவு வெளிச்சம் குறைந்த இடமாகவும் இருக்க வேண்டும். இது காட்போட்டினால் ஆனதாகவோ அல்ல ஓலையினால் இழைக்கப்பட்டதாகவோ அல்லது மரப்பெட்டியாகவோ இருக்கலாம்.

பெட்டியின் அரை வாசி சுத்தமான, மென்மையான நிரப்பு பொருளால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். பொதுவாக வைக்கோல், நெல் உமி மற்றும் மரத்தூள் என்பன பயன்படுத்தப்படுகின்றன.

நான்கு அல்லது ஐந்து கோழிகளுக்கு ஒரு முட்டைப் பெட்டி போதுமானது. இதற்கு 35 சென்ரி மீற்றர் நீளமும் 30.5 சென்ரி மீற்றர் அகலுமும், மற்றும் 30.5 சென்ரி மீற்றர் உயரமுமுடைய பெட்டியைப் பயன்படுத்தலாம். இவ்வாறு செய்வதன் மூலம் முட்டைகள் சுத்தமாகவும், உடையாமலும் நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

**செல்வி சுகந்தி வைரமுத்து**
விலங்கு விஞ்ஞானத்துறை,
தகவல் தொடர்பு மையம்.

பொதுவாக காலை 8மணிமுதல் 11மணி வரையிலான நேர இடைவெளியில் அதிகளவான முட்டைகளைப் பெற முடியும். ஆனாலும் ஒரு நாளைக்கு இருதடவைகள் முட்டைகளைச் சேகரித்தல் பலவிதமான நன்மைகளைத் தருகின்றன. முட்டைகள் அகற்றப்படாமல் இருக்கும்போது அவை உடையும் சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது. இதனை கோழிகள் உணவாக உட்கொள்கின்றன.

இது தொடர்ந்து நடைபெறும்பொழுது சில சந்தர்ப்பங்களில் தாங்களாகவே முட்டையை உடைத்து உண்ணக்கூடிய ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றன. இதனால் முட்டைகளின் எண்ணிக்கை குறைவதுடன் கூட்டின் தரையும் தரமும் பாதிக்கப்படுகின்றது. (தொடரும்)

தன்னை உயர்ந்தவனாக்கிக் கொள்ள உழைப்பும் விடா முயற்சியும் தேவை. உயர்ந்தவன்போல் நடிப்பது ஆபத்தாக முடியும்.

*– சுவாமி இராமதாசர்*

வலம்புரி

# வலம்புரியின் 9ஆவது அகவையில் உங்களுடன்...

அன்புமிக்க வலம்புரி வாசகர்களுக்கு பல கோடி வணக்கங்கள். உங்கள் வலம்புரிக்கு இன்று அகவை ஒன்பது.

ஒன்பது ஆண்டை நிறைவு செய்து பத்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில் உங்களின் ஒத்துழைப்பையும் ஆத்மார்த்தமான வாழ்த்துக்களையும் நன்றிப் பெருக்கோடு நினைந்து கொள்கிறோம்.

வலம்புரி நடந்து கொண்ட பாதை கரடு முரடானதென ஐந்து, ஆறாவது ஆண்டு நிறைவில் எழுதியதாக ஞாபகம். ஆனால் அதே வாசகத்தை இவ்வாண்டில் எழுத முடியவில்லை.

ஏனெனில் ஒன்பது ஆண்டுகளில் எமக்குக் கிடைத்த அனுபவப் பட்டறிவு நாம் நடந்து வந்த பாதையின் மகத்துவத்தை எமக்குச் செப்புகிறது.

எம்மைத் தூக்கி எறிந்தவர்களை தாக்கி எழுதினால் என்ன? என்று நினைத்த நினைப்பெல்லாம் தவிடு பொடியாகி, அவர்களுக்கு பாவ மன்னிப்பு கொடுக்கும் பக்குவத்திற்கு நாம் ஆற்றுப் படுத்தப்பட்டுள்ளோம்.

ஆம், கடந்த ஒன்பது ஆண்டுகளின் பயணம் கரடு முரடானதல்ல, அது ஆத்மிகத்தை நோக்கி நடந்த பாதை. தனித்து நடப்பதாக நினைத்த நினைப்பு பிரம்மையானது.

எங்களோடு இறைவனின் திருவருளும், வாசகப் பெருமக்களாகிய உங்களின் உள்ளார்ந்த ஆசியும் சேர்ந்தே வந்தன.

அவை எங்கள் வழித்துணையாய் இருந்து எம்மை வழிப்படுத்தின –வழிநடத்தின.

இதற்கு மேல் எமக்கு –உங்கள் வலம்புரிக்கு எது தேவை. அன்புக்கும் மதிப்புக்குமுரிய சிவஸ்ரீ தண்டபாணிக தேசிகர் தன் ஆசிச் செய்தியில், 2009ஆம் ஆண்டில் வலம்புரி விருது பெற வேண்டுமென விரும்பி வாழ்த்தினார், அந்த விருப்புக்கு நன்றி.

ஆனால் இலங்கையில் வழங்கப்படும் 'ஊடகவிருது' என்பது கேட்டுப் பெறப்படுவது –எனக்கொரு விருது தாருங்கள் என விண்ணப்பித்து விருது பெறும் நடைமுறையில் வலம்புரி ஒருபோதும் இணைந்து கொள்ளாது.

அந்தத் தேவையும் வலம்புரிக் குடும்பத்திற்குக் கிடையாது.

இதற்கு மேலாக, எங்கள் உறவுகள் இருக்க இடமின்றி, உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி வன்னியில் தவிக்கும்போது ஊடக விருதைப் பெற்று ''விருது பெறும் அளவில் தமிழ் ஊடகங்கள் சுதந்திரமாக இயங்குகின்றன'' என்பதை உலகிற்கு செய்தியாக்கி எங்கள் இனத்திற்கு இழுக்குத் தேட நாம் ஒருபோதும் தயாரில்லை.

எமக்கு வேண்டியதெல்லாம் அமைதி –சமாதானம் –துயரமற்ற வாழ்க்கை. அடுத்தவர் வீட்டில் அழுகுரல் கேட்கும்போது நாம் மட்டும் மகிழ்வாய் இருப்பது முறையா?

'பக்கத்திருப்பவர் துன்பம் தன்னைப் பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி' இது பாரதியின் பாடல் வரிகள். இதுவே மனித நேயத்தின் அடிப்படை. இதனையே இறைவன் விரும்பி ஏற்கிறான்.

ஓ! இறைவா எமக்கு விருது எதுவுமே வேண்டாம்.உன் திருவருளை என்றும் எமக்குத் துணையாகத் தந்தருளும். அதுபோதும் உன் நினைவோடு எங்கள் தூயபணி தொடரும்.

# இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீன் பிடி படகுகள்

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

இலங்கையின் கடற்பரப்பில் நாள்தோறும் 500 இந்திய மீன்பிடி படகுகள் அத்துமீறி நுழைகின்றன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தியாவிலிருந்து வெளிவரும் ஆங்கில தினசரி பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடத்தல்காரர் களின் நடமாட்டத்தால் நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தல் உள்ளதா கவும் இதர பயங்கரவாத அமைப் புக்களை விட கடத்தல்காரர்க ளுடன் புலிகளுக்கு நெருக்கமான தொடர்பு உள்ளதாகவும் மஹிந்த கூறியுள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து தமிழர் கள் வெளியேறி உள்ளதை அறி வோம். அவர்கள் புலிகளின் ஆயுத முனையில் பிடித்து வைக் கப்பட்டுள்ளனர் என்றும் அந்த நேர்காணலில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஓ-6)

# பூசா முகாமிலுள்ளோரை விடுவிக்க நடவடிக்கை

## பிரதி அமைச்சர் பெ. இராதாகிருஷ்ணன்

(கொழும்பு)

இம்மாத இறுதிக்குள் பூசா முகாமிலிருந்து மேலும் பலரை விடுவிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். தடுத்து வைக்கப்பட்டிருந்த 35 பெண்களில் மூவர் அண்மையில் விடுவிக்கப்பட்டனர்.

மற்றும் பலரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடத்தல் மற்றும் காணாமல் போதல் தொடர்பான விசாரணைகளை மேற்பார்வை செய்யும் குழுவின் அங்கத்தவரும், வாழ்க்கைத் தொழில், தொழில் நுட்ப பயிற்சி பிரதி அமைச்சருமான பெ. இராதாகிருஷ்ணன் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற குழு கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் கருத்து தெரிவித்த பொலிஸ்மா அதிபர், காணாமல் போயுள்ளதாகவும் கடத்தப்பட்டதாகவும் குழுவிடம் செய்யப்பட்டுள்ள புகார்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்துள்ளதாகவும் காணாமல் போனவர்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் காணாமல் போயுள்ள 171 பேர் தொடர்பான அறிக்கை ஒன்றையும் குழுவிடம் கையளித்தார்.

குழுவின் தலைவரான அமைச்சர் ராஜித சேனாரட்ண இங்கு உரையாற்றுகையில்,

நிரபராதிகளான பலர் பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதையிட்டு வேதனை அடைகின்றோம். பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளின் போது இது போன்று துயரமான சம்பவங்கள் இடம் பெறாமையினாலும் போலியான தகவல்களாலும் சிலர் பொலிஸாரை தூண்டி விடுவதை நாம் அனுமதிக்க முடியாது.

அதே போல் கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக இதுவரை எவ்வித தகவலையும் அறிய முடியாமல் இருப்பதால் மக்களிடம் அவநம்பிக்கை ஏற்படும் நிலைமை உருவாகியுள்ளது.

எனவே காணாமல் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை பொலிஸார் சமர்ப்பிப்பது அவசியமாகும் என்றார்.

பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

பூசா முகாமிலிருந்த 327 பேரில் 12 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இம் மாத இறுதிக் குள் 40 க்கும் அதிகமானோர் விடுவிக்கப்படக் கூடிய ஏற்பாடுகளை செய்துள்ளதாக பயங்க ரவாத தடுப்புப் பிரிவு இயக்குனர் வாக்கிஸ்டர் எம்மிடம் தெரிவித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது மகிழ்ச்சியான விடயமாகும் என்றார். (ஓ-6)

# வலம்புரியை வாழ்த்திய தெய்வங்களின் நினைவில்...

## உள்ளதை உள்ளபடி எழுதும் வலம்புரி



எங்கள் மண்ணின் அன்றாடச் செய்திகளை ஆக்கபூர்வமாக வெளியிட்டு வருவது என்ற ஒழுங்கில் வலம்புரி நாளிதழுக்கு முக்கிய பங்கு உண்டு.

உள்ளதை உள்ளபடி எழுதி வாசகர் மனதில் செய்திகளை நிலைநிறுத்துவது வலம்புரி நாளிதழ் ஆகும்.

அத்துடன் எமது மண்ணின் அவலங்களையும் மக்கள் முன்வைத்து தெரியப்படுத்துகின்ற பாங்கு பாராட்டுக்குரியது.

எனவே வாசகர்கள் மனதில் நிலைபெறச் செய்கின்ற அவசியமான செய்திகளை வலம்புரி மேலும் மேலும் தந்துதவ வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி (செல்வி) தங்கம்மா அப்பாக்குட்டி**
***ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.***
**(வலம்புரியின் 8வது ஆண்டு நிறைவையொட்டி வழங்கிய ஆசிச் செய்தி.)**


## வளர்மதி போன்று வளர்க



ஆண்டுகள்தோறும் அரிய கட்டுரைகளுடன்
அவசியமான செய்திகளையும் நடுநின்று கூறி
நலம்பல புரிந்த வலம்புரி ஏடே! மேலும்
பல்லாண்டு நிலவுக! பரமன் திருவருளால்
நற்செய்திகளுடன் நல்லுணர்வூட்டி
வளர்மதி போன்று வளர்க வளர்கவே...

**செல்லத்துரை சுவாமிகள்**
**சிவத்தொண்டன் நிலையம், யாழ்ப்பாணம்.**
**(வலம்புரியின் 6 ஆம் ஆண்டு நிறைவையொட்டி வழங்கிய ஆசிச் செய்தி.)**

## பானுவின் அகவை பெற்று வாழ் நீ



படிக்க படிக்க சுவை பிறக்கும்
பற்பல செய்திகள் எமக்களித்து
நடக்கும் சிறுவர் முதலாய
நரைத்த வயோதிபர் வரை – கலைகள்
தொடுக்கும் கதைகள் கட்டுரைகள்
தூய சமயத் தத்துவங்கள்
அடக்கும் களஞ்சியமென விளங்கி
ஐந்தாண்டுற்றாய் வலம்புரியே

கற்றவர் விழுங்கும் கற்பகமாய்
கனியாய் நன்னெறி காட்டுகின்ற
பெற்றவன் ஒத்த பணி புரியும்
பெரும் புகழ் படைத்த வலம்புரியே

உற்றவர்க் கருளும் நாரணன் கை
ஓங்கும் வலம்புரிச் சங்கொலிபோல்
பற்றிடும் புவனமெல்லாம் பயின்று
பானுவின் அகவை நீ வாழி.

**அருட்கவி. சீ. விநாசித்தம்பி புலவர்**
**அளவெட்டி நாகேஸ்வரம்.**
**(வலம்புரியின் 5 ஆம் ஆண்டு நிறைவையொட்டி வழங்கிய ஆசிச் செய்தி.)**

# ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிக்கு உயர் தேசிய மாணவர்களை பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்கள் நிறுவனத்தின் விளம்பரப் பலகையில் போடப்பட்டுள்ளதாகவும் இது வரை பதிவுகளை மேற் கொள்ளாத மாணவர்கள் எதிர் வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் இத்திகதிக்கு பின்பு பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்றும் உயர் தொழில் நுட்ப நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார். (ஓ)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## அன்பே பலனைத் தரும்



சமுதாயத்தின் வாழ்வில் தான் தனிமனித வ ாழ்வு அடங்கியுள்ளது சமுதாயத்தின் இன்பத்தில் தான் தனிமனித இன்பம் அடங்கியுள்ளது. இது அழியாத உண்மை,இந்த அடித்தளத்தில் தான் உலகமே இயங்குகிறது. எல்லை அற்றதான சமுதாயத்துடன் ஒன்றி ,அதன் இன்பத்தில் இன்பம் காண்பதும் ,அதன் துன்பத்தில் துன்புறுவதுமாக மெல்ல மெல்ல முன்னேறுவது தான்தனிமனிதனின் ஒரே கடமை. கடமை மட்டும் அல்ல ; இந்த நியதியை மீறினால் மரணம் , பின்பற்றினால் மரணமில்லாப் பெரு வ ாழ்வு உண்டாகிறுது.

உலகமாகிய இந்த நரகத்தில் ஒருவன் ஒரு நாளாவது மற்றவனது இதயத்திற்குச் சிறிது இன்பமும் அமைதியும் அளிக்க முடியுமானால்அதுவே உண்மை. வாழ்நாள்முழுவதும் கஷ்டப்பட்டபிறகு நான்இந்த உண்மையைஅறிந்தேன்;ஏனைய அனைத்தும் வெறும் மண்ணாங்கட்டி...

# இலங்கை தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் கவலையுடனும் அக்கறையுடனும் உள்ளேன்

## மார்க்சிஸ்ட் எம்.பி.க்களுடனான சந்திப்பில் பிரதமர் மன்மோகன் சிங்

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தாம் கவலையுடனும் அக்கறையுடனும் இருப்ப தாகவும் தமிழ் மக்களைப் பாதுகாக்கவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான ரீதியில் நிவாரணம் அளிக்கவும் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.பிக்கள் நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து விரிவாக எடுத்துக் கூறி னர். அதற்கு பதிலளிக்கும்போதே பிரதமர் இவ் வாறு கூறியுள்ளார்.

இந்த சந்திப்பில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பின ருமான சீத்தாராம் யெச்சூரி தலைமையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் டி.கே.ரங்கராஜன் மற்றும் பி.மோகன் ஆகியோர் இடம்பெற்றிருந் தனர்.

அத்துடன், தமிழக மீனவர்களைப் பாது காக்கவும் மத்திய அரசு தொடர்ந்து நடவடிக் கை எடுத்து வருவதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யின் மாநில செயலாளர் வரதராஜன் வெளி யிட்டுள்ள அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட் டுள்ளது. (இ)

# ஆங்கில பாட இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் இவ் வருடம் நடத்தப்பட்ட விசேட ஆங்கில வகுப்புக் களுக்கான இறுதிப் பரீட்சை நாளை ஞாயிற் றுக்கிழமை காலை9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்படத்தில் ஆரம்பமா கும் என்றும் பயிற்சியில் பங்குகொண்ட அனைத்து மாணவர்களும் தவறாது இப் பரீட்சையில் பங்குபற்றுமாறும் வேண்டப்படு கிறார்கள். (ஓ-29)

# நீதிமன்றத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் மிகவும் நிதானமாகவே தீர்மானிக்கப்படுகின்றன

## பிரதம நீதியரசர் சரத் என் சில்வா

நீதிமன்றத்தினால் எடுக்கப்படுகின்ற தீர் மானங்கள் எழுந்தமானவையல்ல. அவை மிகவும் நிதானமானவையாகவே தீர்மானிக் கப்படுகின்றன என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டக் கல்லூரியில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசு கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள் ளார். பிரதம நீதியரசர் சரத் என் சில்வா இங்கு தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறி யுள்ளதாவது,

சட்டத்துடன் தொடர்புடைய சகல பிரிவு களும் ஒத்துழைப்பு வழங்கினால் மாத்திரமே சட்டவாட்சி நீடிக்கக் கூடியதாக இருக்கும். நீதித்துறையைச் சார்ந்த நாம் அனைவரும் சட்டத்தின் பல்வேறு நிறுவனங்களுடன் செயற்பட்டு வருகின்றோம் . எந்த ஒரு நிறுவ னம் சிறப்பானதாக இருக்கின்றதோ அ தன் வெளிப்பாடுகளும் சிறப்பானதாகவே இருக் கும். இதனையொத்ததே சட்டவாட்சியாகும்.

இன்றைய காலகட்டத்தின் நீதித்துறைக்கு எமது நாட்டில் பாரிய ஏற்றுக்கொள்ளல் இருக்கிறது. பொதுவான தேவைகளில் குறிப் பிடத்தக்க மாற்றங்களை செய்துள்ளமையே இதற்குக் காரணம்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் குறுகியதும் விரிவானதுமான வகையில் சட்டத் தீர்மா னங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ்வாறு எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் நிதானமானவை. அதனூடான தீர்ப்புக்கள் எதுவும் எழுந்தமானவையாக மேற்கொள் ளப்படுவதில்லை.

சிந்தித்து நிதானமான தீர்ப்புகளே வழங் கப்படுகின்றன. நீதித்துறை எடுக்கின்ற தீர்மா னங்களை அல்லது உத்தரவுகளை நாட்டின் அதிக தரப்பினர் ஏற்றுக் கொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

நீதித்துறையின் நடவடிக்கைகளை நாட்டு மக்கள் நோக்கிக் கொண்டே இருக்கின்றனர். நீதித்துறையின் தீர்மானங்கள் தனிப்பட்டவ ரின் முயற்சியில் அமைந்துவிடவில்லை. சட்டத் துறையில் அங்கம் வகிக்கின்ற சட்டத் தரணி கள், நீதிபதிகள் உள்ளிட்ட அனை வரின தும் ஒன்றிணைந்த வெளிப்பாடாகும். (ஓ-6)

# வர்த்தகரிடம் கப்பம் கோரிய நால்வர் பொலிஸாரால் கைது

## தீவிர விசாரணை தொடர்கிறது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவரி டமிருந்து ஐந்து இலட்சம் ரூபா கப்பம் கோரி யதாகக் கூறப்படும் நான்கு சந்தேக நபர்கள் கொ ழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் விசேட பொலிஸ் குழுவினரால் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

குறித்த வர்த்தகரிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு உரையாடியுள்ள மேற்படி சந்தேக நபர்கள் தம்மை விடுதலைப் புலி உறுப்பினர்கள் என அறிமுகப்படுத்தியுள்ள துடன் அவ்வியக்கத்துக்காக இந்தக் கப்பம் பணம் கட்டாயம் செலுத்தப்படவேண்டும் எனவும் அச்சுறுத்தியுள்ளதாக பொலிஸ் விசார ணைகளின் போது தெரியவந்தது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ரஞ்சித் குணசேரக தெரிவித்தார்.

இதுதொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச் சாளர் மேலும் கூறியதாவது, கடந்த புதன் கிழமை மாலை .குறித்த வர்த்தகரிடமிருந்து கப்பப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முற் பட்டபோதே மேற்படி நான்கு சந்தேக நபர் களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஜா-எல, மாளிகாவத்தை மற்றும் மருதானை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்பு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அவ்விடத்திற்குச் சென்றுள்ள பொலி ஸார் சந்தேக நபர்களைக் கையும் மெய்யு மாகக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (ஓ-6)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட் டல் அமைச்சில் நிலவும் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி உதவியாளர் பதவி வெற்றி டங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜை களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

விண்ணப்பதாரிகள் உரிய மாதிரி விண் ணப்படிவத்திற்கு ஏற்ப தாயரிக்கப்பட்ட விண் ணப்பப் படிவத்தை 2009.01.16 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, செயலாளர்,சிறுவர் அபிவிருத்தி,பெண்கள் வலுவூட்டல் அமைச்சு,இலக்கம் 177, நாவலர் வீதி, நாரஹேன்பிட்டி,கொழும்பு 5 எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்விண்ணப்பம் கோரல் தொடர்பாக மேலதிக தகவல்களை 2008.12.19 ஆம் திகதி வெளியாகியுள்ள வர்த்தமானியிலோ அல் லது வலம்புரிக் காரியாலயத்தில் நேரில் வந்தோ பார்வையிடலாம். ஓ-

# சீமெந்து பைக்கற்றின் விலை 75 ரூபாவால் குறைப்பு

(கொழும்பு)

சீமெந்து ஒரு பைக்கற்றின் விலை 75 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இந்த விலை குறைப்பு நேற்று முன்தினம் நள்ளி ரவுடன் அமுலுக்கு வருவதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கட்டிட மூலப் பொருட்கள் கூட்டுத்தாபனத் தில் சீமெந்துக்கே மேற்படி விலை குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமை யில் கூடிய வாழ்க்கைச் செலவு மற்றும் உணவுப் பொருட்களின் பாதுகாப்பு தொடர்பி லான தீர்மானத்துக்கு அமையவே சீமெந்தின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் மேலும் கூறியுள் ளதாவது,

கடந்த காலங்களில் அரச துறையும் சீமெந்து விற்பனைச் சந்தையில் பிரவேசித்து ஏனைய தனியார் சீமெந்து நிறுவனங்களு டன் ஒரு போட்டித் தன்மையை ஏற்படுத்திக் கொண்டது.

அரச வர்த்தக கூட்டுறவு மொத்த விற் பனைக் கூட்டுத்தாபனம் சீமெந்துக் கூட்டுத் தாபனம் மற்றும் இலங்கை சீமெந்து நிறு வனம் ஆகிய அரசாங்க நிறுவனங்களின் வி.எம்.சி.சீமெந்து மற்றும் அரச கட்டிட மூலப் பொருட்கள் கூட்டுத்தாபன சீமெந்து ஆகிய வற்றின் விலையை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 75ரூபாவால் குறைப்பதற்கு அரசாங்கம் நேற்று முன்தினம் தீர்மானித் தது.

இவ்வாறு விலை குறைவடைந்துள்ள சீமெந்து பைக்கற்றுகளை நுகர்வோர் இரத் மலானை மற்றும் சங்கராஜா மாவத்தை கொழும்பு -10 ஆகிய பகுதிகளில் அமைந் துள்ள சீமெந்து களஞ்சியசாலைகளில் பெற்றுக் கொள்ள முடியும்.

நூற்றுக்கு மேற்பட்ட சீமெந்து பைக்கற்று கள் கொள்வனவுசெய்யப்படுமாயின் அந்த சந்தர்ப்பத்தில் ஒரு பைக்கற் 710 ரூபாவுக்கும் நூறு பைக்கற்றுகளையும் விடக் குறைந்த எண்ணிக்கையில் கொள்வனவு செய்யப்படு மாயின் ஒரு பைக்கற் 720 ரூபாவுக்கும் விற் பனை செய்யப்படும்.

சீமெந்து பாவனையாளர்கள் மற்றும் கட்டிட நிர்மாணத்துறையில் ஈடுபடுவோருக்கு பயனைப் பெற்றுக் கொடுக்கும் வகையி லேயே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள் ளது. (ஓ-6)


# வாகன இலக்கத் தகடுகள் விநியோகம்

கொழும்பு அலுவலகத்திலிருந்து யாழ் மோட்டார் போக்குவரத்து திணைக்கள அலுவலகத்திற்கு கீழ் குறிப்பிட்டுள்ள 120 வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றினை வாகன உரிமையாளர்கள் தங்களுடைய பதிவுப் புத்தகம் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றைச் சமர்ப்பித்து அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ளலாம் என மோ ட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

கிடைக்கப்பெற்ற இலக்கத் தகடுகளில் பிற மாகாணங்களில் வாகன உடமை மாற்றம் செய்யப்பட்டு அதற்கான வாகனப் பதிவுப் புத்தகம் கிடைத்தவர்கள் தமது பிற மாகாணத் திற்குரிய வாகன இலக்கத் தகடுகளை ஒப்படைத்து தமது புதிய இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்றுள்ள இலக்கத்தகடு களின் விபரம் NP GA 4912, NP GB 3030, NP GB-4185, NP GC-5508, NP GD-4461, NP GG-9229, NP GH-5269, NP GH-7404,NP GI-9963, NPGI-2601,NP GI-4644, NP GL -7652, NP GK -1722, NP GK-1736, NP GK-1877, NP GK-1927, NP GK-2004, NP GK-4213, NP GK-9472,NP GL-8562,NPGL-8975,NP GL-9017, NP GL-9067, NP GM-1872, NP GN -4510, NP GN-7568, NP GO-0062, NP GO-0947,NP GO-3401, NP GO-4222, NP GO-5590, NP GO-5896, NP GP- 6562, NP GP-7016, NP GQ-2013,NP GQ-2877,NP GQ- 8598, NP GR-0533.NP GR-9558, NP GR-9802, NP GS-8654,NP GT-0087,NP GT-0171, NP GT-0303, NP GT-2237,NP GT-2237,NP GT-6541,NP GT-6464, NP GT-6526, NP GT-9706, NP GU-3102, NP GV-4835, NP GW-5327, NP GW-9685,NP GX-9110, NP HA-8502,NP HA-9892,NP HC-5261,NP HC-6453,NP HC-1900,NP HI-2683, NP HI-4893, NP HK-3648, NP HK-3649,NP HK-5302, NP HM-9441,NP HN -2000, NP HN -4381, NP HN-7326, NP HN-9260, NP HO-0488, NP HO -9106, NP HO-9369, NP HR-2184,NP HR-2215, NP HR -2229,NP HR-2233, NP HR-5726,NP HS-6857, NP HS-7965,NP HS-4065, NP HT 1697, NP HV-1348,NP HV-3147,NP HV-3176, NP HV-3178,NP HV-3180, NP HV-9237, HP HA-1817,NP JC-4555,NP JC-5328,NP JC-8376, NP JD-1285, NP JD-7109,NP JC-1235, NP JJ-2756, NP JJ-5675, NP JJ-7670, NP JL-9153, NP JN-6794, NP JP-8227,NP JQ-5519,NP JR-3616, NP JU-7157, NP JW-0755, NP JX-3533, NP JY-0749, NP KA-1860, NP KB-6397, NP ME-7171, NP QA-0767, NP QA-6618, NP QC-1054, NP RA-1103,NP RA-2427,NP RD-4021, NP TR-6843,NP HJ-0962,NP HJ-4220, NP JA-2071. (ஓ)

# காம்பீர் சதம்; டிராவிட் அரைச்சதம் இந்திய அணி நிதானமான ஆட்டம்



(மொகாலி)

காம்பீர்,டிராவிட்டின் நிதானமான இணைப் பாட்டத்தின் மூலம் இரண்டாவது டெஸ்டில் இந்திய அணி நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 179 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் இந்திய அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இந்நிலையில் தொடரின் தீர்க்கமான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று மொகாலியில் ஆரம்பமானது.

இப்போட்டி நேற்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவிருந்த போதும் மைதானத்தில் போதிய வெளிச்சமின்மை காரணமாக காலை 9.50 மணிக்கே ஆரம்பமானது.

இதில் நாணயசுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி கொடுத்தது.

அணி 6 ஓட்டங்கள் மாத்திரமே எடுத்தநிலையில் ஆரம்ப அதிரடித் துடுப்பாட்ட வீரர் சேவாக் ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

எனினும் தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக காம்பீருடன் இணைந்த டிராவிட் நிதானமான ஆட்டத்தை வழங்கினார்.

அண்மைக்காலமாக இரட்டை இலக்கை கூடஎட்ட முடியாமல் தடுமாறிவந்த டிராவிட் இப் போட்டியில் பல சர்சைகளுக்கு பின் களமிறங்கப்பட்டார்.

எனினும் சர்சைகளுக்கு முடிபுகட்டும் வகையில் நிதானமாக ஆடிய டிராவிட் இந்திய அணிக்கு பலமான துடுப்பாட்டத்தை வழங்கினார்.

மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய காம்பீர் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்ய இந்திய அணி 100 ஓட்டங்களைக் கடந்தது.

இந்நிலையில் நீண்ட வெளிக்கு பின் டெஸ்ட் அரங்கில் டிராவிட் தனது அரைச் சதத்தை பெற இந்திய அணி 150 ஓட்டங்களை கடந்தது.


இந்த ஜோடியை பிரிக்க இங்கிலாந்து அணித்தலைவர் பீற்றர்சன் பந்துவீச்சாளர்களைமாற்றியும் களத்தடுப்பில் பல வியூகங்கள் வகுத்தும் பலன் அளிக்கவில்லை.

காம்பீர் தனது 4ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார். இறுதியில் நேற்றய ஆட்டம் குறைந்தது 18 ஓவர்கள் வீசவேண்டிய நிலையில் மைதானத்தில் போதிய வெளிச்சமின்மை காரணமாக முன்னதாகவே நிறுத்தப்பட்டபோது இந்திய அணி ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 179 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் காம்பீர் (12 பவுண்டரி,ஒரு சிக்ஸரும் அடங்கலாக) 106 ஓட்டங்களுடனும் டிராவிட் 65 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

பந்துவீச்சில் வீழ்த்தப்பட்ட சேவாக்கின் விக்கெட்டை பிரோட் கைபற்றியிருந்தார். இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.





# சந்தர்போல் 20ஆவது சதம் ருசிக்க மேற்கிந்திய தீவுகள் பலமடைந்தது

## நியூசிலாந்து அணி போராட்டம்

(நேபியர்)

சிவநாராயணன் சந்தர்போல் சதம்பெறமேற்கிந்திய தீவுகள் அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேரமுடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6விக்கெட்டுக்களையிழந்து 258 ஓட்டங்களை எடுத்தது.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியதீவுகள் அணி 2 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட்,வெற்றி தோல்வி இன்றி முடிபடைய தொடர் சமனிலையில் உள்ளநிலையில் இரண்டாவது டெஸ்ட் நேற்று நேபியரில் ஆரம்பமானது.


இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி ஆரம்பத்தில் 74 ஓட்டங்களை மாத்திரமெடுத்த நிலையில் 4 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

எனினும் 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சந்தர்போல்-நாஸ் ஜோடி சிறப்பாக ஆடி 163 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்து மேற்கிந்திய தீவுகள் அணியை வலுவான நிலைக்கு கொண்டு சென்றது.

இந்நிலையில் நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிபில் மேற்கிந்திய தீவுகள் அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 258 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடிய சிவநாராயணன் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களை எடுத்து 20ஆவது சதத்தை பூர்த்தி செய்ததுடன் நாஸ் 74 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஹயில் 37 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சாளர் ஓ பிறின்,விக்டோரி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பிறங்க்லின் மற்றும் பட்டேல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.



# ஆஸி.அணி 322 ஓட்டங்களால் இரண்டாவது இன்னிங்ஸில் முன்னிலை

(பேர்த்)

இரண்டாவது இனிங்ஸில் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களின் சுமாரான ஆட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி 322 ஓட்டங்களால் முன்னிலையிலுள்ளது.

முன்னதாக தனது முதலாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி 281 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட்,2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 17ஆம் திகதி பேர்த்தில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையுமிழந்து 375 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஹட்டிச் 83 ஓட்டங்களையும் மைக்கெல் கிளார்க் 62,சைமண்ட்ஸ் 57 ஓட்டங்களையும் ஹடின் 46 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் நிற்னி 4 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன்,மோர்கல் மற்றும் ஹரிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் 8 விக்கெட்டுக்களையிழந்து 243 ஓட்டங்களை எடுத்திருந்தது. இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி மேலதிகமாக 38 ஓட்டங்களை எடுத்து அதன் முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 281 ஓட்டங்களை எடுத்தது.

இதில் கலிஸ் ,டி வில்லியர்ஸ் ஆகியோர் தலா 63 ஓட்டங்களையும் அணித் தலைவர் சிமித் 48 ,அம்லா 47,ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜோன்ஸன் 8 விக்கெட்டுக்களையும் ,சிடில்,கிரஜ்ஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இனிங்ஸில் 94 ஓட்டங்களால் முன்னிலையிலிருந்த அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து 2ஆவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய மூன்றாவது நாள்ஆட்டநேர முடிபில் 7 விக்கெட்டுக்களையிழந்து 228 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ஹடின் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் ஹடிச்,சைமண்ட்ஸ் ஆகியோர் தலா 37 ஓட்டங்களையும் அணித் தலைவர் பொன்டிங் 32 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் ஸ்ரையன் ,ஹரிஸ் மற்றும் கலிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும்,நிற்னி ஒரு விக்கெட் டையும் வீழ்த்தினர். அவுஸ்திரேலிய அணி,3 விக்கெட்டுக்கள் மீதமிருக்க 322 ஓட்டங் களால் முன்னிலையிலுள்ள நிலையில் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

மாநகர சபா, யாழ்ப்பாணம்,



# முள்ளிவாய்க்...

ஈடுபடும் பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இத் தாக்குதலில் ஆறு சிறுவர்கள் உட்பட 11 பேர் படுகாய மடைந்துள்ளனர். பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

மிகவும் தாழ்வாகப் பறந்த விமானங்கள் நடத்திய தாக்குதலினால் முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால் பகுதிகளில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரத் தேர்வு எழுதிய மாணவர்கள் அச்சத்தினால் பாடசாலைச் சீருடையுடன் வீதியில் அலறியடித்து ஓடினர்.

இத் தாக்குதலினால் முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால் பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது என வன்னித் தகவல்கள் தெரிவித்தன. இத் தாக்குதலில் படுகாயமடைந்தோரின் விபரம் வருமாறு,

பி.கேசிகா (வயது 13), சா.சுபாசினி (வயது 20), கேசவன் (வயது 16), மருதன் (வயது 22), சித்திரா (வயது 05), சாவித்திரி (வயது 15), தேவப்பிரியா (வயது 16), குபேரன் (வயது 09), நாகமணி (வயது 45), தேவராசா (வயது 50), மருதநாயகம் (வயது 32) ஆகியோர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்பு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-5)

# கிளி.,முல்லைத்தீவுப்...

மோதல்களின் போது முல்லைத்தீவு பிரதேசத்தில் அமைந்துள்ள கருப்பட்ட முறிப்பு பகுதியை படையினர் சுற்றிவளைத் துள்ளதாகவும் பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் கூறியது.

இது தொடர்பில் பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் மேலும் கூறியதாவது, கருப்பட்டமுறிப்பு பகுதியில் நேற்று முன்தினம் 3.40 மணிமுதல் 5.40 வரையான இரு மணித்தியாலத்தில் படையினர் மேற்கொண்ட முன்னகர்வு முயற்சியின் போது குறித்த பகுதி முழுவதும் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

இதன் போது இரு தரப்புக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்றுள்ளன. அத்துடன் முல்லைத்தீவு, குமுழமுனைப் பகுதியிலும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன. கிளிநொச்சி, அடம்பன் வடக்கு, இரணைமடு தெற்கு, அக்கராயன் குளம் வடக்கு ஆகிய பகுதிகளிலும் இரு தரப்பிற்கும் இடையில் கடும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

குறித்த பகுதிகளில் விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்ட மண் மேடுகளை தகர்த்தவாறு படையினர் மேற்கொண்ட முன்னகர்வு முயற்சிகளை அடுத்தே இந்த மோதல்கள் இடம் பெற்றுள்ளன. என ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இதேவேளை கிளிநொச்சியில் உள்ள முறிகண்டியில் படையினர் மேற்கொண்ட முன்னகர்வு தமிழீழ விடுதலைப் புலிகளினால் முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் படைத்தரப்பைச் சேர்ந்தவரின் உடலம் உட்பட படையப் பொருட்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது, முறிகண்டியில் இருந்து இரணைமடு நோக்கி நேற்று காலை 8.45 மணியளவில் படையினர் செறிவான பல்குழல் வெடிகணைச் சூட்டாதரவுடன் முன்னகர்வினை மேற்கொண்டனர்.

இம் முன்னகர்வு விடுதலைப் புலிகளினால் முறியடிக்கப்பட்டு படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவரின் சடலம் உட்பட படையப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஏ.கே.எல்.எம்.ஜி-01, ரி-56-02 ரக துப்பாக்கி-01 ஆகியவை உட்பட படையப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர். (ச-5)

# இயக்குநர்...

தமிழ்நாட்டிலுள்ள ஈரோட்டில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையை விமர்சித்து பேசியதற்காகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ஆதரித்துப் பேசியதற்காகவும் சீமானை கைது செய்துள்ளதாக தமிழ்நாடு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டை அடுத்த கொங்குவார்பட்டி அருகே மாயாண்டி குடும்பத்தார் என்ற படப்பிடிப்பிலிருந்த இயக்குநர் சீமானை நேற்று பொலிஸார் கைது செய்தனர்.

பின்னர் அவரை பெரியகுளத்திலுள்ள இரண்டாவது குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

முன்னதாக சீமானை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யவேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் தங்கபாலு கோரிக்கை விடுத்திருந்தார்.

காங்கிரஸ் கட்சியை சேர்ந்தோரினால் சீமானின் காரும் அவரின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டதுடன் அவரைக் கைது செய்யவேண்டுமெனவும் போராட்டத்தில் குதித்தனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும் தமிழ்த் தேசிய பொதுவுடமைக் கட்சியின் தலைவர் பெ.மணியரசனும் நேற்றுப் பிற்பகல் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-5)

# பெற்றோலின் விலைக்...

இலங்கை முழுவதும் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டு பொதுமக்கள் பெரும் அவலத்துக்குள்ளாகினர்.

இதேவேளை ஒரு லீற்றர் பெற்றோலை 100 ரூபாயாகக் குறைக்குமாறு உயர் நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பின் உத்தியோக பூர்வ பிரதி அரசாங்கத்திற்கு நேற்றே கிடைக்கப் பெற்றதாக கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

பெற்றோல் விலை தொடர்பாக தகவல் திணைக்களத்தின் தலைவர் இரண்டு தினங்களுக்கு முன்னர் கூறியதற்கு மேல் எதனையும் நான் கூற விரும்பவில்லை. நீதிமன்ற உத்தரவின் பிரதி அரசுக்குக் கிடைத்துள்ளது.

அமைச்சரவை கூடியபோது நீதிமன்ற உத்தரவு கிடைத்திருக்க வில்லை. எனவே அடுத்த வாரம் அமைச்சரவை கூடும் போது விலை குறைப்பு பற்றி ஆராயப்படும் என ஊடகத்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேநேரம் கொழும்பிலோ அல்லது நாட்டின் ஏனைய பாகங்களிலோ பெற்றோலுக்குத் தட்டுப்பாடு இல்லை குறிப்பிட்ட அமைச்சர், நேற்று 160 பவுசர்களில் பெற்றோல் அனுப்பி வைக்கப்பட்டதாக பெற்றோலியத் துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தன்னிடம் கூறியதாகத் தெரிவித்தார்.

இதேவேளை பெற்றோலின் விலையை 100 ரூபாயாக நேற்று நள்ளிரவு முதல் குறைப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணங்கியதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

வெளிவந்துவிட்டது
2009 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தரம்:5 மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டம்
அனைத்துப் பாடங்களையும் உள்ளடக்கிய 2009ற்கு மாற்றமடைந்த புதிய பாடத்திட்டம்
ஆசிரியர்கள், வழிகாட்டுநர்கள், பெற்றோர்கள், மாணவருக்கானது
குறைவான பிரதிகளே வந்துள்ளன
கிடைக்குமிடங்கள் விலை: ரூபா :120.00
பூபாலசிங்கம் புத்தகசாலை.யாழ்நகர்
அன்னை புத்தகசாலை.யாழ்நகர்
துர்க்கா புத்தகசாலை.சுன்னாகம்
மொடேன் புத்தகசாலை.நெல்லியடி
சயன்ஸ் அக்கடமி.நல்லூர்.

# நத்தார், ...

நள்ளிரவு திருப்பலிகளுக்கு தத்தம் ஆலயம் சென்று கிறிஸ்து பிறப்பு விழாவையும் புத்தாண்டையும் கொண்டாடுவர்.

அதற்கமைவாக இரவு ஊரடங்கை தளர்த்தி கிறிஸ்தவர்கள் ஆலயம் சென்று வர படையினர் ஒத்துழைக்க வேண்டுமென யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.குடாநாட்டு படைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியை கடித மூலம் வேண்டியுள்ளதாக யாழ்.ஆயரின் செயலர் வணபிதா. எஸ்.றொசான் அடிகளார் தெரிவித்தார். (ச)

# படையினருக்...

நடந்த கடுஞ்சமரில் இரு தரப்பிலும் இழப்புக்களைக் குறைத்து இரண்டு தரப்பும் கூறுவதே வழமை எனினும் இராணுவத்தினருக்கு ஏற்பட்டிருக்கும் இழப்புக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் கூறியிருக்கும் தகவல்களில் உண்மை இருக்கிறது என இராமன் தனது கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

தகவல்களை வைத்துப் பார்க்கும்போது இரண்டு தரப்புகளும் பாரிய இழப்புக்களைச் சந்தித்துள்ளது தெளிவாகிறது. எனினும் விடுதலைப் புலிகளை விட இராணுவத்தினரே கூடுதலான உயிர் மற்றும் ஆயுதங்களை இழந்துள்ளனர். இந்த மோதல் தாம் இழந்த ஆயுதங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு விடுதலைப் புலிகளுக்கு ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

எனினும் நிலைமை விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே உள்ளது. நன்கு அனுபவம் மிக்க, பயிற்றப்பட்டவர்கள் போராடி வருகின்றனர். ஆயினும் அவர்களிடம் ஆயுதங்களே பற்றாக் குறையாக உள்ளது. இலங்கை விமானப்படையினரால் தொடர்ச்சியாக நடத்தப்படும் வான் தாக்குதல்களிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

அதே நேரம் இலங்கை இராணுவம் படையினரின் எண்ணிக்கையையும் ஆயுதங்களையும் அதிகரித்துள்ளதாகவும் சீனா, ஈரான் போன்ற நாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற பணத்திலிருந்து ஆயுதங்கள் பலவற்றைப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். எனினும் விடுதலைப் புலிகளைப் போன்று இராணுவத்தினர் தேர்ந்த பயிற்சிகளைப் பெற்றிருக்கவில்லையென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

# ஆயர்களின் கோரிக்கையை...

கத்தோலிக்க மற்றும் அங்கிலிக்கன் திருச்சபை ஆயர்கள் கூட்டாக விடுத்த கோரிக்கைக்கு அமைய நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்களுக்காக வட பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் யுத்தம் நிறுத்தப்படாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே வைத்தால் மாத்திரமே அவர்களுடன் அரசாங்கம் அரசியல் பேச்சுவார்த்தையொன்றுக்குச் செல்லும்.

ஆயுதங்களைக் கைவிட்டாலே புலிகளுடன் பேச்சு என்பதை அரசாங்கம் தெளிவாகக் கூறிவிட்டது.

அவர்களுடன் பேச்சுக்குச் செல்வது பற்றி இதுவரை அரசாங்கம் எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை என அவர் கூறினார்.

நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டக் காலங்களில் வடபகுதியில் நடந்து வரும் யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளும், அரசாங்கப் படைகளும்போர் நிறுத்தம் ஒன்றுக்குச் செல்ல வேண்டுமென யாழ்., மன்னார், அநுராதபுரம் ஆகிய மறைமாவட்ட ஆயர்களும், குருநாகல் மற்றும் கொழும்பு மாவட்ட அங்கிலிக்கன் திருச்சபை ஆயர்களும் இணைந்து அறிக்கை மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வரும் 'வன்னி மக்கள் இந்த காலப்பகுதியிலாவது சற்று ஆறுதலடைவதற்கு இரு தரப்பும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் இலங்கை தொடர்பாக சர்வதேச ரீதியில் ஏற்பட்டிருக்கும் எதிர்மறையான நிலைப்பாடு குறித்து மாற்றப்படவேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

அத்துடன் வன்னிப் பகுதியில் நடந்து வரும் மோதல்களில் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களைப் பாதுகாப்பான சூழலில் வாழ வைப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் அரசாங்கம் இணைந்து பணியாற்ற வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. (ச-5)

வாருங்கள்...
விடுதலைப் பெருவிழா
இலவசம்!!!
கவலை, கண்ணீர், தீராத வியாதி,
பிசாசின்பிடி, பில்லி சூனியக்கட்டு,
பரம்பரை சாபங்கள் ஆகியவற்றிலிருந்து
இயேசு விடுதலை கொடுக்கிறார்....
இடம் - நாற்சதுர சுவிசேஷ சபை,
பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர்.
நேரம்- வெள்ளி பிற்பகல் 2.00மணிக்கும், சனி, ஞாயிறு 3.00 மணிக்கும்.
காலம்: மார்கழி 19ம், 20ம், 21ம் திகதிகளில்.
(வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு தினங்களில்)
19ம் திகதி (வெள்ளி) பல கலை நிகழ்ச்சிகள் உள்ளடங்கிய ஒளி விழா நிகழ்வு நடைபெறும்.
"வருத்தப்பட்டுப்பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்.11:28)
இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி, நல்லூர்.
(2013)

பெற்றோர்களே! மின்வெட்டினால் உங்கள் பிள்ளைகளின் கல்வி பாதிக்கின்றதா!
உங்கள் மின்சார கட்டணத்தை
இழை மின்குமிழிற்குப் பதிலாக CFL
மின்குமிழைப்பயன்படுத்துவதன் மூலம்
30% முதல் 60% வரை குறையுங்கள்.
(30% மின்சாரத்தை சேமியுங்கள்)





ஒவ்வொரு பெற்றோர்களும் உங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி கருதி 300/= முதல் 400/=வரை செலவு செய்வதன் மூலம் (ஒரு CFL மின்குமிழை பயன்படுத்துவதன் மூலம்) பல ஆண்டு காலமாக இருந்த மின்வெட்டை நிரந்தரமாக இல்லாமல் செய்யுங்கள்.
சனசமூக நிலைய நிர்வாகிகளே! மாதர்சங்க நிர்வாகிகளே!
உங்கள் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு வீடுகளிற்கும் ஒரு CFL ஐ வாங்கி விநியோகிப்பதன் மூலம் உங்கள் பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிடுங்கள்.
ஆலயநிர்வாகிகளே! வர்த்தகநிலைய உரிமையாளர்களே!
நீங்கள் பயன்படுத்துகின்ற ரியுப்லைற்றிற்கு எலக்ரோனிக் சோக்கைப் பயன்படுத்துவதன் மூலம் மின்கட்டணத்தில் 50% மீதப்படுத்துங்கள் மின்வெட்டை இல்லாது செய்யுங்கள்.
ஏற்கனவே 10 பிரதேசசெயலகம், யாழ்ப்பாண மாநகரசபை, 4 பிரதேசசபைகள், 10 பாடசாலைகள் CFL மின்குமிழைப்பயன்படுத்தி அதிகளவு மின்சாரகட்டணத்தை மீதப்படுத்துகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
குறிப்பு:- பாடசாலைகள், வங்கிகள், ஆலயங்கள், பலநோக்குகூட்டுறவுச்சங்கங்கள், சனசமூக நிலையங்கள், மாதர்சங்கங்கள், பிரதேசசெயலகங்களிற்கு 15% கழிவுகளில் ஒருவருட உத்தரவாதத்துடன் ஒரு மாதகடன் அடிப்படையில் வழங்கப்படும்
JAFFNA TECHNICAL INSTITUTE
(பெருமாள் கோயில் முன்வீதி)
No. 45, Clock Tower Road, Jaffna. T.P: 222-6434
NEW ASIAN CENTER (வர்த்தகவங்கி முன்பாக)
No. 56/15, Stanly Road, Jaffna.T.P: 0779254078

WESTERN UNION TRANSFERT D'ARGENT
உலகின் எப்பாகத்திலிருந்தும் இங்கு பணத்தினை அனுப்புவதற்கு இலகு வழி
சங்கீதா ஏஜென்ட்
'வெஸ்டன் யூனியன் பணப்பரிமாற்றம்'
அப்பணத்தை விரைவாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக் கொள்ள யாழ்நகரில் MMBL Money Master இன் உபமுகவர்
சங்கீதா ஏஜென்ட் அன் கொமினிக்கேசன்
412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(HNB அருகாமை)
எம்மிடம் வெஸ்டன் யூனியன் மூலம் பணத்தினை பெற்றுக் கொள்ளும் அனைவருக்கும் பெறுமதிக்கேற்ப அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்படும். அத்துடன் இங்கிருந்தவாறே வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் உறவுகளுக்கு உணவுகள், உடைகள் VDO, CD க்கள், ஆவணங்கள் போன்றவற்றை குறைந்த கட்டணத்தில் துரித கதியில் அனுப்பி, பெற்றுக் கொள்ளலாம். எதிர்வரும் நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு விசேட சலுகைக் கட்டணத்துடன் பொதிகள் அனுப்பலாம்.
T.P:- 021 222 8559
Fax:- 021 222 8546
(C-1860)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.